
www.tamilarangam.net

# சுவடுகள்

மலர். 14

14. Udgave



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சஞ்சீவி

ஏப்ரல்-மே மலர்-14

அட்டைப் பட விளக்கம்:

ஆள்பவர்
ஆதிக்கரின்
உதாசினத்தினால்,
தேவைகளால்
சொந்த நாட்டிலே
அகதிகளானோம்

- சஞ்சீவி -

10 Kr.

பக்: உள்ளடக்கம்:


3. 30.03.91 அன்று நடைபெற்ற கலந்துரையாடலின்போது 'சஞ்சீவி'யால் பிறப்பிக்கப்பட்ட அறிக்கை.
8. கவிதை.
10. கட்டுரை.
16. மீராவின் தொடர் நவீனம்.
18. கவிதை.
19. இலக்கிய கலந்துரையாடல்.
27. குறுக்கெழுத்துப் போட்டி இல:13.
30. கவிதை. (நூல் அறிமுகம்)
32. சிறுகதை.(செ. இதழ் தொடர்ச்சி)
42. சிறுகதை.
46. டென்மார்க்கில் டெனிஷ்க்காரர் மட்டுமா?
48. சிரிக்கச் சிந்திக்க.



சஞ்சீவியின் தொடர்புகளுக்கு:

CHANCHIVE
POST BOX - 1205
7500 HOLSTEBRO. D.K.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோக்கு

அன்புடன் வாசகர்கட்கு.

மார்ச் மாதம் (30-03-1991) நடந்த எமது கலந்துரையாடலில் எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினை இங்கு தருகின்றோம். வழமைக்கு மாறாக அறிக்கை நிகழ்ச்சியின் இறுதியில் வாசிக்கப்பட்டு, விவாதத்துக்கு எடுக்கப்பட்டது. அவ் அறிக்கையானது பின்வருமாறு....

30-03-1991.

சஞ்சீவியினால் ஏற்பாடு செய்துள்ள இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ள வருகை தந்துள்ள அனைவருக்கும் முதற்கண் எமது நன்றிகள். டென்மார்க்கில் ஒரு தமிழ்ப் பத்திரிகை தொடர்ந்து வெளிவரவேண்டும், என்பது தான் எங்கள் அனைவரது நோக்கம் என்று நாம் கருதுகின்றோம். நாம் பரீட்சார்த்தமாக "பதின்மூன்று மலர்களை" உங்கள் முன் வெளிக்கொண்டுவந்துள்ளோம். பத்திரிகைத்துறைக்கு முற்றிலும் புதியவர்களால் செய்யப்பட்ட முதல் முயற்சி என்று தான் இதைச் சொல்லலாம். இதில் பலருக்கு திருப்தியும், அதிருப்தியும் ஏற்படுவது இயற்கையே. இத்தகைய விடயங்களை கலந்துரையாடுவதன் மூலம் பல சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளலாம். ஆனால் எமது இக் கலந்துரையாடல் சஞ்சீவியின் வளர்ச்சிக்கும், தொடர்ந்து வெளிவருவதற்கும் துணைபுரிய வேண்டும் என்பதே எங்கள் முன் உள்ள முதல் வேலை முறையாகும்.

வாசகர்களின் தேவைகளைப்பூர்த்தி செய்வது என்பது எமது முதல் கடமையாகும். (ஆனால் பாலியல் மற்றும் சிந்தனையைச் திசைதிருப்பும் மட்டமான தேவைகளை குறிப்பிடவில்லை.) இதற்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கு. இங்கு கூடியுள்ள எழுத்தாளர்கள், வாசகர்கள், பத்திரிகை வெளியீட்டாளர்கள் (ச. ஆ-கு) முதல் கண் குறைந்த பட்ச ஒருமைப்பாட்டுக்கு வரவேண்டும். இதுவே எமது இரண்டாவது வேலைமுறையாகும். இந்த வேலைமுறை பூர்த்தியாகும் பட்சத்தில் வாசகர்களிடம் எந்த விதமான கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம் என்ற அடுத்த கட்ட நடவடிக்கைக்கு செல்லமுடியும். பத்திரிகை நடத்துவதில் வரவு-செலவு (பொருளாதாரம்) மிகவும் முக்கியமான ஒரு விடயம். இது பற்றியும், இதன் அடிப்படையில் சஞ்சீவி இதழ் வெளியீட்டின் மாற்றம் பற்றியும் பொதுவான அறிக்கையில் தருகின்றோம்.

HOLSTEBRO தமிழ்- டெனிஸ் நட்புறவுச் சங்கம் ஒரு பத்திரிகை வெளியிட வேண்டும் என்ற முடிவின் அடிப்படையில் பல்வேறு கருத்துக்களைக் கொண்ட 15 பேர் அடங்கிய குழுவினால் ஆரம்பித்தில் சஞ்சீவியானது வெளிக் கொண்டு வரப்பட்டது. ஆனால் அன்று சங்கத்தின் அடிப்படைக் கொள்கையினைக் கூட பிரதிபலிக்காது! 15 பேரின் மன எழுச்சிகளின் அடிப்படையில் "சஞ்சீவி" வெளிவந்தது உண்மையே. அது தவிர அப்படிபட்ட சூழ்நிலையில் ஒரு கொள்கையின் அடிப்படையில் சஞ்சீவியினை நடத்தக்கூடிய சாத்தியப்பாடு இருக்கவில்லை என்பதையும் தெளிவுபடுத்திக் கொள்ளுகின்றோம்.

இந்த பதின்முன்று மலர்களின் வெளியீட்டினூடாக பெறப்பட்ட அனுபவமும், வாசகர்களின் விமர்சனமும் எம்மால் உள்வாங்கப்பட்டு, தேடல் அடிப்படையில் நாம் தெரிந்து கொண்டவைகளை உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம். அத்துடன் எமது பத்திரிகைக் குழுவானது இன்று ஆறு பேர்களை மட்டுமே உள்ளடக்கியது என்பதையும் இங்கு தெரியப்படுத்திக்கொள்கின்றோம். இவைகளை நாம் மனதில் நிறுத்திக் கொண்டு, எமது கலந்துரையாடலை ஆரம்பிப்போம். நேரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும், தேவையற்ற விவாதங்களை தவிர்ப்பதற்காகவும் சஞ்சீவியின் பார்வையை முதலில் கூறிக் கொள்கிறோம்.

①

இங்கு வளரும் இளம் தலை முறையினரின் தமிழ் மொ-

www.tamilarangam.net

ஸ்ரீ பதீபி எமது கணிப்பும் வேலை முறையும். இங்கு தனிப்பட்ட முறையில் ஆசிரியர்கள் இலங்கை, இந்தியா போன்ற இடங்களில் இருந்து பல கஸ்டங்களுக்கு மத்தியில் தமிழ் பாடப் புத்தகங்களை வரவழைத்து படிப்பிப்பது ஓர் போற்றத்தக்க விடயம். ஆனால் அந்தப்பாடப்புத்தகங்கள் எமது தாய்நாட்டின் புவியியல், பண்பாடு, பாவனைப் பொருட்களுடன் சம்மந்தப்படுத்தியே எழுதப்பட்டது. அதனை இங்கு அப்படியே பிரயோகிக்கும் பொழுது இங்கு (டென்மார்க்கில்) உள்ள புவியியல்அமைப்பு, சூழல், பண்பாடு, தொழில் நுட்பவளர்ச்சி, சமூகவளர்ச்சி, பாவனைப் பொருள்களின் பாவிப வளர்ச்சி என்பன போன்ற வேறுபட்ட தாக்கத்தினால் அத்தகைய பாடப்புத்தகத்தினை குழந்தைகள் பூரணமாக விளங்கிக் கொள்வதில் ஒரு தடை ஏற்படுகிறது. எனவே தமிழ் மொழியானது இங்குள்ள (டென்மார்கில் உள்ள) புவியியல், சூழல் சுற்றாடல், பாவனைப் பொருள்கள், அன்றாட வாழ்க்கையுடனும் இணைந்து (மாற்றப்பட்டு) கொடுக்கப்பட வேண்டும். இந்த அறியப்பட்ட உண்மையை சஞ்சீவி கூட (13 இதழ்களில்) கடைப்பிடிக்கத் தவறிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அப்படிப்பார்க்கையில் ஒரு சீர் செய்யப்பட்ட பாடத்திட்டம் இங்கு அவசியம் ஆகின்றது.

(௨)

தமிழ்ச் சமூகத்தில் ஆழமாக வேரூன்றியுள்ள சாதிப்பிரச்சினை, சமூக ஒடுக்கு முறைகள் என்பனவற்றுக்கெதிராக அந்தை மக்கள் (வாசகர்கள்) மத்தியில் தெளிவாக மேலும் கருத்துக்களை வெளிக்கொண்டுவரும் வகையில் எழுதுதல்.




(௩)

டென்மார்க்கின் வாழ்க்கை முறையில் எம்மவர்களின் தடுமாற்றங்கள், எதிர்பார்ப்புகள், சந்தோசங்கள், கலாச்சாரச் சீரழிவுகள், மனநிலைப்பாதிப்புக்கள்— அவற்றிற்கான ஆலோசனைகள்/ நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளுதல்.


(௪)

டென்மார்க்கில் இன்று பரவலாக நடைபெற்றுவரும் மதத்திணிப்புகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




எதிராக நல்ல கருத்துக்களை எழுதுதல்.

⑤

புதிய எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்களுக்கு தொடர்ந்து சந்தர்ப்பம் கொடுத்தல்.

⑥

தமிழ் மக்களின் இன்றைய நிலை பற்றிய எமது பார்வை.

அ.

இன்று தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வும், அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளையும் கவிதை, கட்டுரை, சிறுகதைகளின் மூலமாக சொல்லுதல். இது இங்குள்ளவர்களுக்கு நிலைமையினை விளங்கிக் கொள்ள பெரிய உதவியாக இருக்கும்.

ஆ.

வடக்கு- கிழக்கு நிவாரண நிதி சேகரிப்பு.

இந்த நடவடிக்கையானது எமது தாய் சங்கம் உட்பட இங்குள்ள பல தமிழ்-டெனிஸ் நட்புறவுச் சங்கங்களின் கூட்டுத்தலைமையோடு முன்னின்று செய்கிறது. இதில் காசு சேர்ப்பும் நன்கொடைகள் அனுப்புதல், கணக்கறிக்கைகளை சஞ்சீவியில் வெளியிடுதல். இந்நடவடிக்கைகள் சார்ந்த தொடர்புச் சாதனமாக சஞ்சீவி தன்னை இணைத்துக் கொள்வது சாதாரண மனித நேயத்தின் இயல்பே.

இ.


சிங்கள பௌத்த இலங்கை அரசின் சகலவிதமான ஒடுக்கு முறைகளுக்கு எதிராக கருத்துக்களை எழுதும் அதே வேளை, மக்கள் விரோத தமிழ் இயக்கங்களுடன் சஞ்சீவி தன்னை இணைத்துக் கொள்ளாமல் தனித்துவமாக செயற்படும். மலர் 7இல் "இன்று தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காகவும், இலங்கை மக்களின் பிரச்சினைகளுக்காகவும் போராட முற்பட்டு சிறு.... பெரும். காரணங்களுக்காக ஒருவருடன் ஒருவர் கருத்துரீதியிலும்... ஆயுத மூலமும் தங்களைத் தாங்கள் அழித்துக் கொண்டிருக்கும் அவர்களின் பாதைகளை சரி அல்லது பிழை என நாம் கூற முற்படவில்லை. நாம் சரியான நடுநிலைக் கொள்கையினை கடைப்பிடிக்க

www.tamilarangam.net

விரும்புகின்றோம்" எனச் சொல்லப்பட்டது. இதில் சரியான நடுநி
(நடுநிலை என்று எதுவும் இல்லை.)
லை பிழையானது. நடுநிலை என்று எம்மை குறிப்பிட்டது பிழை
யானதே. மலர் 7இல் கூறியதை இவ்வாறு திருத்திக் கொள்கின்
கின்றோம். "தமிழ் மக்களுக்காகவும், இலங்கை மக்களுக்காக
வும் போராட முற்பட்டு சிறை... பெரும்... அரசியல் மற்றும் தனி
நல காரணங்களுக்காக கருத்து ரீதியிலும்.... ஆயுதமூலமும் அங்க
ளைத் தாங்களே அழித்துக் கொள்வதுடன் நிற்காமல் அப்பாவி
மக்கள் மீதும், மனித நேயம் கொண்ட நல்ல மனிதர்களையு
ம். ஒடுக்குவதும், அழிப்பதாகவே இருக்கும் இவர்களின் பாதை
சரி எனக் கூற முற்படாது. அடக்கி ஒடுக்கப் படுகின்ற மக்களி
ன் பக்கம் சார்ந்தே எழுத விரும்புகின்றோம்"..

குழுவேறுபாட்டின் வெவ்வேறு முகங்களினைப் பிரதிபலிக்கா
து எமது கலாச்சார வேரைக் காணவும், பேணவும் அதற்கான
நியாய பூர்வமான தேடல் அடிப்படையிலான கருத்துக்களை சஞ்சீவி
யின் மூலம் எடுத்துச் சொல்லவும். மலர் 6இல் கூறியது போல் கலை
இலக்கியத்தின் வினைநிலமாக இருந்து, இந்த தலைமுறையின
ரிடமும், புதிய தலைமுறையினரிடமும் எமது கலாச்சார மரபின் வே
ரின் சால்பைக் கண்டறிய சஞ்சீவியை ஓர் நல்ல ஊடகமாக்
குவோம்.

மேலும் எந்த நல்ல கருத்
துக்களையும் உள்வாங்கவும், ஆ
ய்வின் அடிப்படையில் கலை
இலக்கியத்தின் புதிய பரிமாணங்
களில், "பழையன கழிதலும் புதியன பு
குதலும்" என்ற அடிப்படையில் எழுத்
தாளர்களையும், வாசகர்களையும் சிந்தி
க்கத் தூண்டுவதற்கு இக்கலந்து
ரையாடலினை நடாத்தி முடிக்க உ
ங்கள் மனப்பூர்வமான உதவியினை
நாடி சஞ்சீவியின் எதிர்காலத்தை உங்க
ளிடம் ஒப்படைக்கின்றோம்.




. சஞ்சீவி ஆசிரியர் குழு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இருக்கை

மைசக்கல் நேரம்
விழித்துப் பார்த்தேன்
வீட்டில் ஒருவரும் இல்லை
கண்கள் மீண்டும் மூடுகிறது.

ஏதோ அமுக்கங்கள்
என்னை அமுக்குகின்றன.
அமிழ்ந்து கொண்டு போகின்றேன்.

கருத்த ஆடு
அலறியபடி என்னருகில் வந்து விழுந்தது
விழித்துப்பார்த்தேன்
முலைக்கும் தொடைக்கும் இடையில்
இரத்தம் பாய்கிறது.
சன்னம் பாய்ந்திருக்க வேண்டும்.

யார் சுட்டார்கள் ?

மயக்கம் தீரவில்லை.
கண் மட்டும் மூடப்பார்க்கிறது.
வீட்டில் யாரையும் காணவில்லை.
ஆடுமட்டும் பெரிதா அலறுகிறது.

தெற்குச் சின்னையர் வீட்டில்
சேமக்கலச் சத்தம் கேட்கிறது.
எழுந்து போகின்றேன் போலும்.
வீடு வெளிச்சென்று கிடக்கிறது.
யாரையும் காணவில்லை.

www.tamilarangam.net

காலில் மட்டும் ஏதோ தட்டுப்படுகிறது.
குனிந்து பார்க்கின்றேன்
சின்னத் தங்கம் செத்துக்கிடக்கிறாள்.

மீண்டும் தூக்கம் வருகிறது.
மயங்குகின்றேனா எனத் தெரியவில்லை.
அவளை அணைத்துக் கொண்டு
தூங்குகின்றேன் போலவும்

யாரோ ரோட்டில் கதைப்பதுமட்டும்
தெளிவாக கேட்கிறது.
"இயக்கங்களுக்கும்
இணக்க சபைகளுக்கும்
சண்டையாம்"

மயக்கம் தீர ஆறுதலாக
எழுவோம்.
மதங்களும் தீரட்டும்.

அதுவரை தூங்கியே கிடப்போம்.

— விஜே

(59 ம் தொடர்ச்சி)

அனுப்பி வைப்பாயா..? வேறு ஒரு உதவியையும் நான் எதிர் பார்க்கவில்லை.

என் கண்கள் இரண்டும் இருண்டு கொண்டு போனது. பேசாமல் கடிதத்தை மடித்து வைத்துவிட்டு அமைதியாக இருந்து, எனக்கு இந்த "பிரச்சினை" என்பதை மீண்டும் மீண்டும் இரைமீட்டிக் கொண்டு என்னை நினைத்து எனக்குள்ளேயே சிரித்துக் கொண்டேன்.

- முத்தம் -

www.tamilarangam.net

# ஐரோப்பாவிலே ஒரு கலாச்சார நகரம்

ஒரு தனிமனிதனுடைய வாழ்வை அவனது இனம், மதம், மொழி, நாடு, சூழல் என்பனவே நிர்மாணிக்கிறது. எந்த ஒரு சராசரி மனிதனும் தன்மனம் போனபோக்கில் வாழ்வதில்லை. அவனது சிந்தனை, பழக்க வழக்கங்கள், தினசரி வாழ்வு ஏதோ ஒரு விடயத்தால் பாதிக்கப்படுகின்றது. அதுதான் அவன் சார்ந்த இனத்தின் கலாச்சாரம். இது கால ஓட்டத்தில் மாறுபடலாம். எனவே ஒவ்வொரு இனமும் அல்லது இனக்குழுவும் தமது தனித்துவத்தைப் பேணவேண்டும். அந்த வகையில் உலகிற்கே முன்மாதிரியாக "ஒரு கலாச்சார நகரம்" சில பத்து (DECADES) வருடங்களுக்கு முன் வழிகாட்டத் தொடங்கியது.

(ஜேர்மனியில்)

மேற்கு ஜேர்மனியில் ஒவ்வொரு நகரமும் தனக்கே உரித்தான ஒவ்வொரு முக்கிய விடயத்தை சுவீகரித்துக் கொண்டது. ஸ்ருட்காட்டில் ஆலைத்தொழிலகம் உருவாயிற்று. ஈகாஸ்ர் தொழிற்சாலைகளை ஆரம்பித்தது. கேர்னிங் காங்கிரஸ் சென்ரர், தொழிற்சாலைகள் என ஆரம்பித்தது. ஆனால் கொன்ஸ்ரன்ஸோ நகரோ எதுவுமற்று தனித்து விடப்பட்டது. இந்நிலையில் கொன்ஸ்ரன்ஸோ மக்களும், நகரபிதாவும் அரச அதிகாரியும் ஏதாவது செய்தாகவேண்டும் என்ற முடிவுக்கு வந்து வீடுவீடாகச் சென்று பணம் சேர்த்தனர். சேர்க்கப்பட்ட பணம் ஒரு பெரிய மண்டபம் கட்டக்கூடியதாக இருந்தது. எனவே பணம் கொடுத்த மக்கள் விரைவில் தமது நகரில் ஒரு மண்டபம் கட்டப்படுமென ஆவலுடன் இருந்தனர்.

ஆனால் நகரபிதாவும், அரசஅதிகாரியும் அந்த ஆவலில் மண் போட்டுவிட்டு இத்தாலிக்குப் போய்விட்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண் சிற்பம்

மக்கள் தமது விழிகளை அகலத்திறந்து என்ன நடக்கப்போகிறது எனப் பார்த்திருந்தனர். அந்தப் பயணமே கலாச்சார நகரத்திற்கு அத்திவாரமிட்டது. இருவரும் இத்தாலியில் மிகப் புகழ் வாய்ந்த சிற்பியான 'ஜியா கொமெட்டி' (GIACOMTTI)யின் சிற்பம் ஒன்றை வாங்கினர். இந்தச் சிற்பி பிகாசோவுக்கு நட்புடையவர். இவரது சிற்பங்கள் உலகின் புகழ்வாய்ந்த மியூசியங்களில் (MUSEUM) மட்டுமே உண்டு. இதுவே நகரின் மத்தியில் உள்ள பெண் சிற்பம். இது உலக ரசிகர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் ஒரு செய்தியாகிவிட்டது. சகலரும் இங்கே என்ன நடக்கிறது என்று பார்க்க வரலாயினர். ஆனால் ஒரு சில மாதங்களில் இந்த விடயம் செய்தியின் பின்னணிக்கு போய்விட்டது.

எனவே மீண்டும் இந்த இரு மனிதரும் சிந்திக்க ஆரம்பித்தனர். அடுத்து என்ன செய்வது? வாகனங்கள் சென்று வரும் வீதியை மூடிவிட்டு கடைகள் உள்ள பகுதியில் நடைபாதை (WALKING STREET) ஆரம்பிப்பது என முடிவாகியது. அதுவே இன்றைய நடைபாதை. இதுவே உலகின் முதன் முதலானது. இத்திட்டத்தில் சில வருடங்களின் முன் இருபத்தையாயிரமாக இருந்த சனத்தொகை குறைய ஆரம்பித்து போய், கூட ஆரம்பித்தது. இந்நிலையில் மேலும் 15வரை பேர் குடியேறினர். இதனால் கடைக்காரரிடம் காணி பெறப்பட்டு இன்றைய தொடர்மாடி வீடுகள் உருவாக்கப்பட்டன.


அறுபதுகளின் பிற்பகுதியில் நகரசபை ஒரு இசை

www.tamilarangam.net

அமைப்பாளரை நிரந்தரமாக வாடகைக்கு அமர்த்தியது. ஐரோப்பாவிலேயே இப்படி ஒரு நகரசபை செய்தது இதுவே முதல் தடவை. மக்கள் இது வீணான செயல் என எதிர்த்தனர். ஆனால் நிர்வாகமோ மனம் தளரவில்லை. எனவே மீண்டும் ஒரு புதுமை, ஆனால் மக்களை மேலும் கவரும் முயற்சி. அதுவே நீச்சல் தடாகம், அது சர்வதேச போட்டிகள் நடத்தும் அளவுக்கு தரமானது. அழகிய வேலைப்பாடு கொண்டதுமாகும்.

இந்த வரிசையில் சில காலம் செல்ல சர்வதேசக் கலாச்சாரங்களின் மையமாக "ஓடின் தியேட்டர்" உருவானது. இங்கு நிலத்தில் அமர்ந்து பார்க்கக்கூடியதாக இருந்தது. ஆனால் இது மக்கள் மத்தியில் அவ்வளவு விரும்பத்தக்கதாகப் படவில்லை. ஆனால் இன்றும் கலையின் சர்வதேசியத்தில் இது முன்னணி வகிக்கிறது. இந்த நகர மக்களின் உணர்வினால் உந்தப்பட்ட நகரசபை "ஹொல்ஸ்ரப்றோ மண்டபம்" (Holstebro Hallen) கட்டியது.

கலாச்சார நகரம் பின்னும் ஓய்ந்து விடவில்லை. இந்நிலையில் தான் உலகிற்கே வழிகாட்ட மீண்டும் ஒரு தடவை பாடசாலைக்கு பிள்ளைகள் பாதுகாப்பாக வீட்டிலிருந்து சென்றுவர "துவிச்சக்கரவண்டி"ப்பாதையும் மேம்பாலமும் கட்டப்பட்டது. உலகில் முதன் முதல் இங்கே தான் அதன் மாதிரி உருவானது.



*Holstebro Kunstmuseum Villa opført 1905, arkitekt Andreas Clemmensen. Nybygning opført 1981, arkitekt Hanne Kjærholm*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

இதைவிட இங்கே கலை நூதன சாலை (ART MUSEUM) உருவாக்கப்பட்டது. ஐரோப்பாவிலேயே, ஆபிரிக்காவைச் சேர்ந்த மரத்தினால் ஆன சிற்பங்கள் அதிகமாக சேர்த்து வைத்துள்ள நூதன சாலைகளில் இதுவும் ஒன்று. டென்மார்க்கின் பிரபல ஓவியரான ஹென்றி கீரப் [HENRY HEERUP] இன் (200×278 CM) மிகப் பெரிய ஓவியம் இங்கே தான் உள்ளது. ஹோல்ம் ஒல்சென் [HOLM OLSEN) என்பவரால் இரண்டாம் உலகம யுத்த காலத்தில் இருந்து அவரது இறுதி நாள் வரை இவரால் சேர்க்கப்பட்ட ஆபிரிக்கச் சிற்பங்கள் இங்குள்ளன. ஐரோப்பாவில் உள்ள இது போன்ற சேகரிப்புகளில் இது குறிப்பிடத்தக்கது. அல்பேட் மாட்ஸ் (ALBERT MERTZ) இன் காகித வெட்டுக்கள் பல இங்கே உள்ளது. இத்துடன் ஐரோப்பாவின் [illegible] கலைஞர்களது கலைப்படைப்புகள் இங்கே காட்சிக்கு உள்ளது. இத்துடன் "கலாச்சார நகரம்" உருவாக அத்திவாரமிட்டப் காரணமாக இருந்த சிற்பத்தை உருவாக்கிய அல்பேட்டோ கியாகொமெட்டியின் 150 லித்தோகிராப்பிகள் இங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த ரீதியில் தனியார் நிறுவனம் ஒன்று இங்கே தன்னிகரற்று விளங்குகிறது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் உள்ள இசைக்கருவி விற்பனை நிலையங்களில் பெரிய நிலையம் இங்கேதான் இருக்கிறது. பெரு அண்மையில் அமைக்கப்பட்ட பிராந்திய ஒளிபரப்பு (TV) நிலைய.

அடுத்த இதழில்

ஓர் உள்ளிணைப்பு






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

த்தில் ஐரோப்பாவிலேயே முதன் முதலாக லேசர் முறையி
னால் ஒளிபரப்பும் சாதனம் இங்கேதான் உள்ளது. க-
லை, கலாச்சாரங்களை எட்டுத்திக்கும் பரப்புவதில் ஒளி
பரப்பு நிலையங்களின் சேவையை மனதில் கொண்டோ
என்னவோ இதில் புதுமை செய்துள்ளனர்.

தற்போது நகரின் மையத்தில் மிக அழகிய நீரூற்று ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் கலை வெளிப்பாடுகளை நேரில் பார்த்தால் புரிந்து கொள்ளலாம். அத்துடன் காங்கிரஸ் சென்ரர். ஒன்றும் தற்போது உருவாக்கப்பட்டு இருக்கிறது. இப்படியாக கலை கலாச்சாரத்திற்கு முக்கியத்துவம் தந்து உலகில் தன்னிகரற்று நிற்கும் ஒரு வாழும்நகர் கொல்ஸ்ரபுரோ.

அதேபோல் சர்வதேசமக்களையும் சந்திக்கவைக்கும் கலாச்சார இல்லமும் இதன் தனிச்சிறப்பே தனி. கலாச்சார இல்லத்தில் டெனிஸ், துருக்கி, லெபனான், தமிழ் முதலிய பல மொழிபேசும் மக்களின் "ஆதிகால இசைகள்" சங்கமிக்கிறது. தமிழரின் மேல் மட்டத்தினரைப் பிரதிபலிக்கும் பரத நாட்டியமும். அதை கௌரவித்து நடன ஆசிரியைக்கு 1990ல் ஆண்டுக்கான "நகரத்தின் கலைஞர் விருதும்" அளிக்கப்பட்டது. அத்துடன் டென்மார்க்கில் "தமிழ் மக்களால்" வெளியிடப்படும் ஒரு சஞ்சிகையான "சஞ்சீவி" வெளிவருவதும் இங்கிருந்தே என்பது குறிப்பிடத்தக்கது.

கலாச்சார இல்லம்




www.tamilarangam.net

எந்த ஒரு சமூகத்துக்கும் தனியே ஒரு கலாச்சாரம் உண்டு. அதைப் பேணி வளர்க்காத எந்த சமூகமும் நிலைத்து நிற்கமுடியாது மட்டுமல்ல இறந்தும் விடும். இதை எமக்கு கற்பிக்கும் இந்த நகரத்தை மனதில் கொண்டு எமது கலாச்சாரத்தை மறவாது வளர்ப் போமாக.

— ஜே. ஆர். நாயகன் —

## சமாதான மேகங்கள்



“மத்திய கிழக்கில் சமாதான மேகங்களை உருவாக்குவோம்”

- ஜோர்ஜ்புஷ் -

www.tamilarangam.net

# சயம்

ஸ்ரீராவின் தொடர் நவீனம்



"தகப்பன் மாதிரி அருமையான பிள்ளை"

"தாயைப்போலை பிள்ளை..... நூலைப்போலை சீலை

என்டு சொல்லுகினம்"

"பாத்தியோ! அந்தக் குடும்பத்திலை இது ஒன்று

மட்டும்......

ஆளும், சாரக்கட்டும், சைக்கிளும்...."

"டெனிஷ்காரர் வாற Party க்கு எங்கடை ஆட்-

களில்லை...

யார் யாரைக் கூப்பிடுறது என்டு யோசிக்கவேண்டும்."

"டெனிஷ் கொடி வேண்ட மறந்தாச்சு"

• • • • • .

எங்கள் பாரம்பரியத்தின் பல்லாக்கை காவ வேண்டியது எம் சந்ததிதான்.

ஆனால்! விரும்பிக்காவியவர்களை விட

தூக்கி சுமக்க விடப்பட்டவர்களே அதிகமானதால்
வீரியமுள்ள காளைகள் எல்லாம்
தம் ஆண்மை இழந்தன
தம்மை இழந்தனர்
தம் சுயம் இழந்தனர்
செம்மறி மந்தையாயினர்.

ஆங்காங்கே மின்னிய
சிந்தனைச் சுடர்களை எல்லாம்
சமுதாய ஆதரவின்றி தூக்கியெறிந்தது
அன்றில்
துரத்தி அடித்தது.

விடி வெள்ளிகளை எல்லாம்
கிரகணப் பாம்புகள் கவ்விக் கொண்டதால்
அரக்கன் மன்னன் ஆனால்
அடிபணிவதில் இறுமாப்புண்டனர் மக்கள்
சுயத்தை விட்டு சுயமாக வாழப்பழகிக் கொண்டனர்.

முடிவு

எம்மை புதைக்கவே நாம் கிடங்கு தோண்டினோம்
கல்லறையில் பட்டு விரித்து கண் அயர்ந்தோம்
அது மட்டுமா நடந்தது?

400 ஆண்டுகளின் அடிமைச் சவுக்கடியில் நாம் அடிமைகளாகவில்லை!
அதிகாரிகளாக கற்றுக் கொண்டோம்.

மனையில் தலையில் குட்டுவிழுந்தாலும்,
வெளியில் மற்றவனை காலால் உதைக்க கற்றுக் கொண்டோம்.
அதுவே இன்றைய கலாச்சாரத்தின் காவலருக்கு அளிக்கப்பட்ட
கரெக்டர் சேட்டிவிக்கட்டுக்கள் ஆனது.

நடுத்துண்டு பாம்பு தின்றால் தான் வாழலாம்

www.tamilarangam.net

என நாமே வரைவிலக்கணம் வகுத்ததால்
பாம்பின் விஷமே மனிதனில் ஊறியது
சுய இரத்தம் சுண்டிப் போனது.
கண்டிப் போனது.

தொடரும்

# என் நண்பனின் பேனா

அன்னிய மண்ணில் உள்ள
என் நண்பனின் பேனா
இரண்டு
கடிதங்களை எழுதுகிறது.

ஒன்றில் அன்பானவளே!
உழைப்பது கஷ்டம்.
அடிமைப்பட்ட வாழ்க்கை.
வந்தது ஏனென்றே தெரியவில்லை.

தன் தாய்க்கு எழுதும் கடிதத்தில்
அம்மா! அண்ணாவை ஏன்
இங்கு அனுப்பவில்லை.
உடனடியாக அனுப்பிவை

மனம் என்னும் சொல்லை அடியாக கொண்டுதான்
மனிதன் என்று சொல் உருவானது போலும்
அதனாற்தான்
என்னவன் குழம்பிவிட்டான்.

செல்வி. பாமதி இராஜதுரை (ஆசிரியை)
கண்டி திருத்தவக் கல்லூரி.

www.tamilarangam.net

# இலக்கியக் கலந்துரையாடல்

அன்பான வாசகர்கட்கு.

கடந்த மார்ச் மாதம் (30-3-1991) நடந்து முடிந்த கலந்துரையாடல் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அங்கு நடைபெற்ற விசய தானங்களை இனிவரும் இதழ்களில் தொடர்ந்து வெளியிட வுள்ளோம். முதலில் சஞ்சீவியின் ஆசிரியர் தலையங்கங்கள் பற்றிய விமர்சனப் பகுதியின் தொகுப்பு கீழ்தரப்பட்டுள்ளது. அதனை திரு. T. சௌந்தர் அவர்கள் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சஞ்சீவி ஆசிரியர் தலையங்கங்கள் பற்றிய என் மதிப்பீடு.

T. சௌந்தர்.

டென்மார்க் வாழ் தமிழர்கள் மத்தியில் பல சஞ்சிகை வர முயற்சிகள் பலராய் எடுக்கப்பட்டன. முதலில் வெளியான "டென்மார்க் முரசு' என்ற சஞ்சிகை இதற்கு ஆரம்ப முயற்சியாக அமைந்தது. இச் சஞ்சிகை இரண்டு, மூன்று மாதங்களே வெளிவந்தது. அது 'சஞ்சீவி'யை போன்று "ஓர் ஆசிரியர் குழுவாலேயே" வெளியிடப்பட்டது. இது பெரும் பாலும் வேறு சஞ்சிகைகளில் வெளியான ஆக்கங்களை வெளியிட்டது மாத்திரமல்லாமல், புதிய எழுத்தாளர்களுக்கு ஆதரவு வழங்காத தாலும் சர்ச்சைக்குரியதாகி பின் ஓர் குறிப்பிட்ட இயக்கத்தின் சார்பாகி மறைந்தது.

இதனைத் தொடர்ந்து சற்று நீண்ட இடைவெளியின் பின் "குயிலோசை" என்றொரு சஞ்சிகை வெளிவந்து ஓர் சஞ்சிகையின் அவசியத்தைப் பூர்த்தி செய்தது. இது ஒரு தனிநபரின் முயற்சியில் உருவா-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னது. இது பல புதிய எழுத்தாளர்கள், கவிஞர்களுக்கு ஊக்கம் அளித்தது. என்பது உண்மை. இச் சஞ்சிகை குமுதம், ஆனந்த விகடன் போன்றவற்றை ஏற்றுக் கொள்ளவில்லையாயினும் அச் சஞ்சிகைகளின் சில குணாம்சங்களைக் கொண்டுதான் விளங்கியது. முன் கூறிய சஞ்சிகை போல் அல்லாமல் தனி ஒருவரே ஆசிரியராகக் கொண்டிருந்தது. குறைகள் பல இருந்த போதிலும் டென்மார்க்கில் ஒரு தமிழ்ச் சஞ்சிகையின் அவசியத்தை அது ஏற்படுத்தியது. அச் சஞ்சிகையும் துரதிஷ்டவசமாக நின்று போக நேர்ந்தது கவலைக்குரியதே.

குயிலோசையின் நிறுத்தத்தின் சிறிது கால இடைவெளிக்குப்பின் மீண்டும் அந்த இடைவெளியைப் பூர்த்தி செய்ய "HOLSTEBRO தமிழ் - டெனிஸ் நட்புறவுச் சங்கத்தால்" "சஞ்சீவி" என்ற சஞ்சிகை வெளிவந்து, இன்று 13 வது இதழும் வந்துவிட்டது. இது மேற் சொன்ன சஞ்சிகைகளிலிருந்து மிகவும் மாறுபட்டு தன்னை வெளிக்காட்ட முனைந்துள்ளது குறிப்பிடக்கூடிய ஒன்று. ஏன் எனில் இவர்கள் "சமூகப்பணி or சமுதாய அக்கறை" என்கிற பதத்தை ஏற்றுக் கொண்டவர்களாக உள்ளனர். இவர்கள் இப்படிக் கூறுபவர்கள் என்பதால் இவர்களின் ஆசிரியர் தலையங்கம் என்பது முக்கிய ஓர் அம்சமாகும். ஏன் அது தான் அவர்களை யார் என இனங்காட்டிக் கொள்ளும் ஓர் அம்சமாகவும் உள்ளதாலும், அவர்கள் இக் கலந்துரையாடலில் "ஆசிரியர் தலையங்கம்" பற்றிக் கூறுமாறு கேட்டுக் கொண்டதாலும் "ஆசிரியர் தலையங்கம் பற்றிய எனது கருத்துக்களை இங்கே முன்வைக்கின்றேன்.

இதழ் - 1.

முதல் இதழில் "கட்சி, மதம், மொழி, இனம் சார்பற்ற சொந்த ஆக்கங்கள் வரவேற்கப்படும்" என்று தலையங்கத்தில் எழுதிவிட்டு அட்டைப்படத்தில் பிள்ளையாரின் படத்தை வெளியிட்டு முன்னுக்குப்பின் முரணாக நடந்துள்ளீர்கள். அட்டைப்பட விளக்கத்தில் "விநாயகர், பிள்ளையார் என்று பெயர்களைக் கொண்டழைக்கப்படும் முதன் முதல் கடவுள் நாள் எல்லாத் தொடக்க காரியங்களுக்கும் நினைத்து தொடங்கப்படுகிறது" என்று எழுதியமை சஞ்சீவி

தொடர்ச்சி - 23



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




என்று தலைப்பில் எழுதப்பட்டுள்ளது. இதில் "நடுநிலையான கொள்கையைக் கடைப்பிடிக்கவே" என்று தடுமாறியிருக்கிறீர்கள். இதழ்-உஃ சீனத்தலைவர் மா.ஓ. சேதுங்கின் மேற்கோளான "நூறு பூக்கள் பூக்கட்டும், ஆயிரம் கருத்துக்கள் முட்டி மோதட்டும்" என்ற மேற்கோளை கூறிய நீங்கள் மீண்டும் அதற்கு நேர் எதிரான "சமாதான சகஜீவனம்" என்ற நவீன திரிபுவாதிகளினதும், காந்திய வாதிகளினதும் கடைகோடித்தனமான முடிவுக்கு வந்துள்ளீர்கள். சஞ்சீவி என்பது டென்மார்க் வாழ்தமிழரின் கலை, கலாச்சார, இலக்கிய முயற்சிகளுக்கு விளைநிலமாக இருக்கும் (இதழ் 5) என்பதால் ஆ-குழுவிற்கு இலக்கிய வாதிகளின் படைப்புகள் பற்றியும், அவர்களின் நடுநிலை பற்றி ஆராய்ந்த தமிழின் சிறந்த இலக்கிய விமர்சகரும், இலங்கையின் எழுத்தாளர்கள் பலரும் மதித்து போற்றிய மறைந்த பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் கூற்றை இங்கு கூறுவது பொருத்தமாகும். இது ஆ-குழுவின் பல ஐயங்களுக்கு பதில் கொடுக்கும் என நினைக்கின்றேன். அது பின் வருமாறு.

"அரசியல் என்னும் சொல்லைக் கேட்டவுடனேயே அஞ்சிப் பதைபதைத்து அது இலக்கியத்துக்குப் புறம்பானது என எவரும் அஞ்சவேண்டியது இல்லை என நான் நினைக்கின்றேன். அரசியல் என்று கூறும் போது நாம் பொதுவாக கருதுவது என்ன? சில அரசியல் கருத்துக்களையே நாம் கருதுகிறோமல்லவா? மனித உணர்ச்சிகளையும், ஒழுக்கத்தையும், பிண்ட பிரமாணைச் செறிவுடன் காட்டும் நாவலானது, அரசியல் கருத்துக்களையும் காட்டுவது தவிர்க்க முடியாததாகிறது. உணர்ச்சியும் அனுபவமும் மனிதனது இதயத்துக்கு நெருங்கியவை; அரசியல் கருத்துக்களோ யாவருக்கும் பொது வானவை; வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடையவையல்ல என்று சிலர் கருதக்கூடும். ஆனால், அத்தகைய கருத்துச் சரியானதா என்று ஒரு சிறிது சிந்தித்துப்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்த்தால் தகும். நமது காலத்து அரசியல் கருத்துக்களும், சித்தாந்தங்களும் எத்தனையோ மனித உள்ளங்களில் ஆழ்ந்த உணர்ச்சியை கிளறிவிடுவனவாய் உள்ளன. எத்தனையோ மக்களின் குணங்களை நிச்சயிப்பனவாயுள்ளன. எனவே நேர்மையோடு சமுதாயத்தைப்பற்றிச் சிந்திக்கும் எந்த ஓர் எழுத்தாளனும் அரசியல் கருத்துக்களை/சித்தாந்தங்களை புறக்கணிக்க முடியாது...... சமுதாய ஈடுபாடின்றி சமுதாய நாவல் எழுத முடியாது.... சமுதாயங்கள் பெரும்பாலும் ஈடாடிக் கொண்டிருப்பன. நடைமுறை வழக்கத்திலுள்ள சமுதாய ஒழுக்கத்தை விட்டுப் பொதுவாகச் சமுதாயத்தின் நலம் பற்றி ஒருவர் சிந்திக்கும் பொழுதும் அச்சிந்தனை அவரின் உணர்வில் கலந்து பல முனைப்பட்ட உணர்ச்சிகளை எழுப்பிவிடும் போது அவர்கள் அறிந்தோ அறியாமலோ ஏதாவது அரசியல் சித்தாந்தத்திலோ, கோட்பாட்டிலோ நம்பிக்கை கொண்டு அதனுடன் ஐக்கியமாகிவிடுகின்றனர். சமுதாயத்தில் முரண்பட்டு போராடிக் கொண்டிருக்கும் பிரிவுகளில் ஒன்றைச் சார்ந்து தமது ஆதரவை அதற்கு அளிக்கின்றனர். மாறி இயங்கி பொருதிக் கொண்டிருக்கும் சமுதாய அமைப்பிலே "நடுநிலைமை" வகிப்பது மரணத்துக்கு சமானம். எனவே தான் தமது அரசியற் சித்தாந்தத்திற்கிசைய ஏதாவது ஒரு வர்க்கத்தை சார்ந்தே தமது ஆதரவை நல்குகின்றனர்" என அவர் குறிப்பிடுகின்றார்.

மற்றும் இந்தியப் படை குறித்த உங்கள் நிலைப்பாடு சரியே. இதேபோல ஏன் மற்றைய நிலைப்பாடுகளை வெளியிட விரும்புகிறீர்களில்லை? இந்தியாவைத் தாக்கினால் ஆபத்தில்லை என்பதாலா? வருங்கால இளம் சந்ததியினர் பற்றிய அக்கறை மிக நல்லது. இதன் மூலம் தங்களுக்குள்ள சமுகப்பற்றை வெளிக்காட்டியுள்ளீர்கள். இது நல்ல போக்கு. இப்படியான நல்ல




தொடர்ச்சி - 25

www.tamilarangam.net



இந்து மதத்தை சேர்ந்தவர்களா-
லேயே வெளியிடப்படுகிறது என்
கிற உணர்வை ஏற்படுத்தக் கூ-
டிய தாய் அமைந்துள்ளது. பி
ள்ளையார் படத்தை முதல் இதழி-
ல் போடுவதை தவிர்த்திருக்கலா
ம்.

இதழ்-உ.

இதழ் உல் "அனைவரை
யும் முற்போக்குச் சிந்தனைத்திறன்
மிக்கவர்களாக உருவாக்குவத
ற்கு.... என்று எழுதியுள்ளீர்கள்
இந்த "முற்போக்கு" என்ற சொல் மிகவும் சர்ச்சைக்கும், கேள்விக்-
கும் இடமாகிறது. ஏனெனில் "முற்போக்கு எழுத்தாளர்கள்" என்ற
சொற்றொடர் மார்க்சிய நிலை நிற்கும் எழுத்தாளர்களை சுட்டிக்கா
ட்டுவதாகும் என்கிறார் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள். இ
வற்றை நாம் முழுமையாக அறிய வேண்டும். ஏனெனில் இலங்கையின் த
மிழ் இலக்கியத்தை செழுமைப்படுத்திய, பாரிய தாக்கத்தை ஏற்படுத்
திய முற்போக்கு எழுத்தாளர்களையும், இலங்கை முற்போக்கு
எழுத்தாளர்களைப் பற்றிய சரித்திரத்தையும் அறிய வேண்டும். அ
ப்படி நோக்குமிடத்து சஞ்சீவி மார்க்சியத்தை அடிப்படையாக
ஏற்றுக் கொண்டுள்ளதா? என்கிற கேள்வி என்னில் எழுகிறது.
இது தவிர்க்க இயலாதது.

மேலும் அதே முன்னுரையில் "மதம், இனம், மொழி, கட்
சி என்பன போன்ற விடயங்கள் பற்றி எழுதப்படும் ஆக்கங்களா
ல் கருத்து வேறுபாடுகள், சர்ச்சைகள் ஏற்படாத வகையில் சகல
ஆக்கங்களும் அமைய வேண்டும்." என்பதே அதன் கருத்தாகும்
என்று முதல் இதழில் வெளியான தலையங்கத்துக்கு (ஆ-ப) விளக்
கம் கூறிவிட்டு அதே கடைசிப் பகுதியில் "ஆயிரம் கருத்துக்கள்
முட்டி மோதுவதன் மூலம் மக்களின் மனதில் சரியான ஆரோ
க்கிய கருத்தை உருவாக்க தனது கதவுகளைத் திறந்து நிற்கும் சஞ்சீவி.
.... என்று கூறுகின்றீர்கள். இவை வாசகர்களை குழப்பிவிடும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓர் பாணி எழுத்து. ஏனெனில் முதலில் குறிப்பிடுகின்றீர்கள் "சர்ச்சைகள் வேறுபாடுகள் ஏற்படாத வகையில்" என்று பின் எப்படி "ஆயிரம் கருத்தை முட்டி மோத வைக்கப் போகின்றீர்கள்? மற்றும் பல தரப்பட்ட கருத்தை வெளியிடாமல் எப்படி மக்களுக்கு சரியான கருத்தை கூறப் போகின்றீர்கள்?

தலையங்கம் எழுதும் ஆசிரியர் குழுவினர் வாசகர்களை குழப்பிவிடாமல் இருக்க முன் யோசித்து ஆ.தலையங்கம் எழுதுவது மிகவும் முக்கியமானது. தவறு செய்து நேர் எதிராக எழுதி எல்லோரையும் குழப்பிவிடாமலிருக்க ஆ.குழுவினர் ஓர் அடிப்படையில் ஒன்று பட வேண்டும், அல்லது ஒரு நிலைப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம். ஏனெனில் ஒரே ஆ.தலையங்கத்தில் முன்னுக்கு பின் முரணான கருத்துகளை வெளியிடுவதால் நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பது குழப்பமாகவே உள்ளது. தலையங்கம் ஆ.குழுவின் ஸ்திரமின்மையையும் வெளிக்காட்டுவதாக அமைகின்றது. இது தீர்க்கப்பட வேண்டிய ஒன்று.

• மலர் - 4, 5-6.

டென்மார்க் வாழ் தமிழ் சிறார்களின் தமிழ் ஆற்றலை வளர்ப்பது பற்றியும், சஞ்சீவியின் பொருளாதார நிலை பற்றியும், டென்மார்க்கில் பத்திரிகை எழுதுவதில் நேரம் செலவழிப்பதில் உள்ள சிரமங்கள் பற்றியும் தெளிவாகக் கூறியுள்ளீர்கள். இதில் குழப்பமாக எதையும் எழுதி வாசகர்களை பெரிய தொல்லையிலிருந்து காப்பாற்றியுள்ளீர்கள். புதிய ஆக்கதாரர்களுக்கு ஊக்கம் அளிப்பதும், மிக நல்ல குணாம்சமாகும்.




• இதழ் - 7

இதுவரை வெளியான ஆ-பக்கம் என்பது இதில் "நோக்கு"

தொடர்ச்சி-21

www.tamilarangam.net




விடங்களை ஆ. பக்கத்தில் நீங்கள் துணிந்து எழுதலாம், இதே போல இன்று இங்குள்ள இளைஞர்கள் சீதனம் வாங்கி மணம்முடிப்பது ஒரு அவமான விடயம். இளைஞர்கள் தங்களை தாங்களே பார்க்கும் வகையில் ஆசிரியர் பக்கத்தில் உங்கள் கருத்தை துணிந்து எழுதலாம். புதிய சமுதாயம் அமைவதற்கான பாதையில் சில சில சீர்திருத்தங்களும் அவசியம் தான். சீதனம் பற்றிப் பேசுவதாயின் இன்று முழுக்கப் பேசலாம். எனவே சீதனத்திற்கும், பிற பிற்போக்கு எண்ணங்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் எதிராக போராட முன்வரவேண்டும்.

● மலர்-8

"சஞ்சீவியைப் பலரும் பல நிலையிலிருந்து பார்க்கிறார்கள். சஞ்சீவியின் கொள்கையும் நிலைப்பாடும் என்றும் ஒன்றுதான்" என்று உள்ளது. ஏன் பார்க்கமாட்டார்கள் என்று சஞ்சீவி கருதுகிறது? சஞ்சீவியின் கொள்கைதான் என்ன? நிலைப்பாடுதான் என்ன? அதை அறிய மிகவும் ஆவலாக உள்ளோம். தயவு செய்து அதனை இங்கு விளக்குமாறு வேண்டுகின்றேன். மீராவின் கடிதத்துக்கு பதில் கூறிய பதில் சஞ்சீவி ஆசிரியர் குழுவின் அனுபவமின்மையும், அவசரமும், அறியாமையும் நன்கு வெளிப்பட்டுள்ளது. மீராவின் கடிதத்திற்கு பதில் எழுதி ஒரு பக்கச்சார்பாக மன்னிப்புக் கோரிய நீங்கள், நான் எழுதிக் கேட்ட கேள்விக்கு பதில் கூறாமல் தங்கள் "நடுநிலை" என்னும் கபட நாடகத்தை நன்கு வெளிக்காட்டியுள்ளீர்கள்.

● இதழ்- 9.10.11.12.13.

குழந்தைகளுக்கு தமிழ் படிப்பித்தல் பற்றிய சஞ்சீவியின் நோக்கு வரவேற்கத்தக்கது. இந் நாட்டில் வாழும் சிறார்களுக்கு ஏற்ற வகையில் பாடத்திட்டம் அமைப்பது பற்றிய சஞ்சீவியின் முன்மொழிவும், அதற்கான முயற்சிகளுக்கும் என்னால் முடிந்த சகலவிதமான உத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திகளையும் செய்யத்தயாராக உள்ளோன். இதைக் கூறுவதால் சஞ்சீவியை ஓர் பாடப்புத்தகமாக மாற்ற வேண்டும் என்பதல்ல என் நோக்கம். அப்படியான ஓர் குழுவுடன் சேர்ந்து செயற்படலாம், சஞ்சீவி இலக்கியப் பணியுடன் நிற்பது தான் சிறந்தது.

மற்றும் சஞ்சீவியின் நடவடிக்கைகளில் மிகவும் சிறப்பானதாக அமைந்தது "தமிழ் அகதிகளுக்கான நிவாரண உதவி" சஞ்சீவியின் இம்முயற்சி மிகவும் பாராட்டக்கூடியது. இங்கே பாரம்பரியங்கள் என்ற பெயரில் தங்கள் நிலையையே மறந்து விரதங்கள், சமயக் கொண்டாட்டங்களுக்கான எல்லையில் ஆசாரப் பெயர்கள் இதைக்காட்டி செய்யும் திமிர்த்தனமான போக்குகளுக்கு மத்தியில் எமது தாய்நாட்டில் அரசியல் கெடுபிடிகளுக்கு மத்தியில் ஒரு நேரச்சாப்பாட்டுக்கு வழியின்றி அனாதைகளாக பதுங்குகுழிகளிலும், அகதிமுகாம்களிலும், காடுகளிலும், வாழும் எமது சகோதரர்களுக்காக இப்பாரிய மனிதாபிமான கடமையை நிறைவேற்ற சஞ்சீவி முன்வந்தமை மிகவும் மனங்கொள்ளத்தக்கது. பாராட்டுக்குரியது. இதனையிட்டு சஞ்சீவி ரொம்பவும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம் இப்படிப்பட்ட காரியங்களை தொடர்ந்து நாம் செய்ய வேண்டும். இவர்கள் யார்? சிவப்பா? கறுப்பா? வெள்ளையா? என ஆராய முயற்சி செய்யும் கட்சிகளைப்புவாதிகளையும். போலி வேசக்காரரையும் பொருட்படுத்தாது சஞ்சீவி மேலும் வளர என் வாழ்த்துகளை கூறி முடிக்கின்றேன்.

வணக்கம்.

# அன்புடன் வாசகர்கட்கு.

அன்புடன் வாசகர்கட்கு


தொடர்ந்து இனிவரும் இதழ்களில் நடந்து முடிந்த கலந்துரையாடலில் நடைபெற்ற விமர்சகர்பகுதிகளான சிறுகதை, கவிதை, கட்டுரை, சஞ்சீவியின் அமைப்பு, சிறுவர் ஒவியமும் அதன் [illegible] தனித்தனி விமர்சனங்களும், வெளிவரும் என தெரியப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குறுக்கெழுத்துப்

## போட்டி: 13

குறுக்கெழுத்துப் போட்டி இல: 13 இன் மூலம் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன். நீங்கள் யாவரும் போட்டிக்குத் தயார்தானே.

<u>கேள்விகள்</u>. <u>இடம் வலம்:</u>

4. 43: ஒரு நூலில் உள்ள கவிதைப் பக்கத்தினை இப்படியும் அழைக்கலாம்.
5. 35: இது எமது தாய் நாட்டு மக்களையும் எந்நேரமும் சூழ்ந்து கதிகலக்குகிறது. குழம்பல்.
7. 46: இது மூடு நிலவாகும்.
16. 3: உலக விளையாட்டுக்களில் இதுவும் ஒன்று. (இதனை அழகார்ந்த தமிழில் இப்படிக் கூறுவர்)
21. 34: கைக்கு இப்படியும் ஓர் பெயர் உண்டு. ஆனால் குழம்பல்.
27. 52: அரசனுடைய குமாரனை இப்படியும் அழைப்பர். இவன் குழம்பியுள்ளான்.
28. 12: பாலூட்டும் பெரிய மீன் இனங்களில் இதுவும் ஒன்று. இது குழம்பியுள்ளது.
29. 50: பூமியின் மறு பெயர்களில் ஒன்று.
51. 41: ஒரு விடயத்தினை பந்தியமைத்து எழுதும்போது பயன்படுத்தப்படும் குறியீடுகளுள் இதுவும் ஒன்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## போட்டியின் விபரங்களும் நிபந்தனைகளும்:

1. போட்டியில் கலந்து கொள்வோர் இதழின் இறுதிப் பக்கத்தில் உள்ள போட்டிக் கூப்பனைப் பூர்த்தி செய்து 09.06.91 க்கு முன்னதாக சஞ்சிகைக்கு அனுப்பிவைத்தல்.
2. சரியாகவும், தெளிவாகவும் பூர்த்தி செய்யப்பட்ட, போ. கூப்பன்கள், சீட்டிழுப்பு மூலம் 1,2,3 ம் பரிசுகளுக்கான தெரிவினைப் பெறுவதோடு, சரியான விடைகளும், பரிசில்களுக்குரியோரின் விபரங்களும் அடுத்து வரும் இதழில் வெளியாகும். பரிசில்கள் உரியவர்களுக்கு காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

---

**கேள்விகள்: மேல் - கீழ்:**

- 1 - : இதுவோர் தமிழ் மாதத்தின் பெயர்.

5. 3: சூரியன் காலை உதித்து, மாலையில் மறையும்வரை பொதுவாக "- - -" வேளை என்பர்.

7. 12: மேல் நிலைக் கல்வியில் 'விஞ்ஞானத்தினை பாடமாகக் கற்போர் விஞ்ஞானப் பாடத்தின், ஓர் பிரிவான இக் கல்வியினையும் கற்பர்.

18. 16: 2ஆவது உலக மகா யுத்தத்தின் போது, ஆசிய நாடுகளின் பெரிதும் குண்டுத்தாக்குதலால் பாதிக்கப்பட்ட நாடு இது.

20. 23: எமது தாய் நாட்டின் பிரதேசங்களுள், இலங்கை இராணுவ, விமானப் படைகளின் குண்டு வீச்சுக்களிலிருந்து, தம்மை ஓரளவாவது பாதுகாத்துக் கொள்ள வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் அமைத்துள்ள "பதுங்கு குழிகளுள்" ஒன்றின் வேற்று மொழிப் பதம் இதுவாகும்.

27. 35: கடலிற் பிரயாணம் செய்யும் கப்பலில் திசை காட்டும் கருவி, அராபியாப் பகுதியை நோக்கி திசை காட்டும்போது, அந்தக் கோணத்தினை மாலுமி இப்படியும் குறிப்பிடுவார், இது சுழம்பல்.

37. 33: சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் குறுக்கீடு செய்து, சூரிய ஒளியை பூமி மீது விழாதவாறு தடுக்கும் போது இந்த சூரிய "- -" உருவாகும். குழம்பல்.

www.tamilarangam.net

40. 45: தாமரை மலருக்கு இந்தப் பெயருமுண்டு.

46. 48: எகிப்தியர் பிரமிட்டுகள் கட்டும்போது, அதனுள் வைத்துக் கட்டப்படும் 'உயிர் அற்ற உடல்' நீண்டகாலம் பழுதடையாதவாறு பாதுகாக்க கருத்த, உறைப்புச் சுவையுடைய இந்த சரக்கு வகைத்தானியத்தையும் பெரிதும் உபயோகித்தனர்.

52. 50: இரசு, கிராசி அமைப்புகளுள் இதுவும் ஒன்று.


கு.போ.இல: 12ன் விடைகள் பரிசுக்குரியவோர் விபரமும்:-

| விடைகள்-இடம்-வலம்: | மேல்-கீழ்: |
|---|---|
| 1. 13: பசி | 1. 2: பசி |
| 6. 8: தூள் | 7. 5: இதூளி |
| 7. 46: இதயம் | 7. 11: ஊர்விதும் |
| 10. 30: தண்டம் | 18. 15: வண்ணம் |
| 18. 5: வயிறு | 21. 20: ஆதி |
| 21. 45: ஆம்பல் | 33. 30: யம்பம் |
| 24. 11: இரையம் | 23. 26: மகுடம் |
| 28. 15: கமம் | 33. 35: பழம் |
| 31. 48: இலாபம் | 46. 43: இல்வம் |
| -37-: கோ | 49. 48: பலா |
| 41. 51: உளி | 52. 51: ஓளி. |
| 49. 43: பல | |
| 52. 39: ஓடிவு. | |

1. S. Ehamparam
C.h.r. Koldsvej 13 St. th
8660 Skanderborg.

2. E.S. Bawan
Hybenvej 63 St. tV
8700 Horsens.

3. P. Rajendran
Nygårdsterrassene 276 F
3520 Farum.



போட்டியில் வெற்றியீட்டியோருக்கும், கலந்து கொண்டோருக்கும் சஞ்சீவியின் சார்பில் வாழ்த்துக்கள், நன்றிகளைத் - தெரிவித்துக் கொள்கிறேன்.

கு. போட். சார்பாக: எம்.வி. யோகா.

www.tamilarangam.net

# இரண்டாவது பிறப்பு

-அருந்ததி-

கரைந்து கொண்டிருக்கிறது காலம்
வெயில் நேரத்து
தெருக்களில் உறைந்த
பனிக்கட்டிகளைப் போல,

அழைப்புவிடுத்துத் தோற்றுப் போகிறது
வாழ்க்கை

பேதம் காணமுடியாத
இரவுகளும், பகல்களும்
அரங்கேற்றமில்லாத ஒத்திகைகளாய்
புதுப் புது முகங்களை
அணிந்து கொண்டு
நீண்டு கொண்டு போன
ஒவ்வொரு பொழுதுகளும்,

இங்கேயும்
நிலவும், வானும் காற்றும் மழையும்
ஆயினும் எங்கே ? .... எங்கே ?....

வாழ்க்கையை
ஆற்றிலே தொலைத்து
குளத்திலே தேடும் சுந்தரர்களாய்

இரண்டாவது பிறப்பெடுக்கத்
தற்கொலை புரிந்தவர்கள்

www.tamilarangam.net

கண்களை விற்றுச் சித்திரம் வாங்கி
காட்சிப் பொருட்களாய்
நாமே மாறி
உலகமெங்கிலும்
உரக்கவே சொல்கிறோம்

வந்து பாருங்கள்
வந்து பாருங்கள்

இந்த நூற்றாண்டில் வாழும்
மூத்த பெரும்
பழங்குடி நாங்கள்

. . . . . . . . .

## நூல் அறிமுகம்




### இரண்டாவது பிறப்பு

அருந்ததி கவிதைத் தொகுப்பு வெளியாகியுள்ளது. இதனைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

ASSEAY
3, Alles Paul Leautaud,
95200 Sarcelles.
FRANCE.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# ரஞ்சனி

(சென்ற இதழ் தொடர்ச்சி) மீரா•

சிவநாயகமும் பரிமளமும் சாம்புமாமா என்ன சொல்லப்போகின்றார் எனப்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சாம்புமாமா கண்களை மெதுவாகத் திறந்து வெளியே பார்த்தபடி சாடையாகச் செருமிவிட்டு ஏதோ ஒரு தயக்கத்தோடு கூறவெளிக்கிட "ஹாய் மாமா......" என ரஞ்சனி கூறிக்கொண்டு வந்து நின்றாள்.

சாம்புமாமாவால் நம்பவே முடியவில்லை. அந்தக்குட்டி ரஞ்சனியா இவள் என வியக்கும் வண்ணம் வளர்ந்திருந்தாள். ஆனால் அந்த சிரிப்பில் சரி குதூகலத்தில் சரி, நீண்டமுடி பின்னங்கால்பட ஓடும் ஓட்டத்தில் சரி எதிலுமே அவள் மாறியிருக்கவில்லை. இயற்கை சில மாற்றங்களை செய்திருக்கிறதே தவிர மற்றும்படி அதே ரஞ்சனி தான். சாம்புமாமாவுக்கு அவள் எந்தவகையிலும் ஓர் கள்ளம் கபடமில்லாத ஒரு குழந்தையாகவே காட்சி தந்தாள்.

ஆனால் அந்தக் கள்ளக் கபடம் அவளில் இல்லாதது தான் இன்று தாய் தகப்பனும் சரி, அன்றில் அவளுக்கும்

www.tamilarangam.net

சரி வந்தன்ன குழப்பங்கள் என அவர் முடிவாக நம்பி-னார்.

"என்ன மாமா திடீரென்று வந்திருக்கிறியள்"

"ஏன் பிள்ளை வரக்கூடாதோ.....உன்னைப் பார்க்க வேணும் போலிருந்தது."

"இல்லை பொய் சொல்லுறையள், அப்பா அம்மா நான் லாசை லவ் பண்ணுறன் என்று அறிந்திருப்பினம். தங்களாலே தடுக்கேலாமல் இருந்து, நீங்கள் வாங்கோ என உங்களைக் கேட்டிருப்பினம், நீங்களும் வந்திருக்கிறியள் அப்படித்தானே" கூறிவிட்டு செல்லமாகக் கண்ணடித்தாள் ரஞ்சனி.

சாம்புமாமா அதிர்ந்து போனார்.

சமாளித்து சிரித்துக் கொண்டு "அப்ப இந்த லாசையே கட்டிக்கிறதா முடிவு பண்ணிட்டியா"

ஒரு வினாடி நிதானித்துக் கொண்டு "மாமா அப்பா அம்மா பயந்து நடுங்கிற மாதிரி கட்டுறது, பிள்ளை பெறுகிறது எல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் நான் அவனை விரும்புகிறேன், அவன் என்னை விரும்புகின்றான், இரண்டு பேரும் சேர்ந்து வாழ ஆசைப்படுகின்றோம். அது பிழையோ மாமா.... அதை அப்பா அம்மா சரி...... இல்லை இப்ப நீங்கள் சரி தடுக்க நினைக்கிறது சரியோ மாமா..." அவள் கண்களில் ஓர் உண்மையின் ஒளி தெரிந்தது.

"இல்லை ரஞ்சனி.... நீயும் அந்தப் பையனும் ஒருவரை

www.tamilarangam.net



ஒருவர் நல்லா விரும்புகிறியள் என்டு சொல்லேக்கை அதைச் செய்யாதையுங்கோ என கடைசிவரையும் தடுக்க மாட்டேன். இந்த நாட்டிலையும் கலியாணம் கட்டுதுகள் சிந்தனையோ குடும்பங்கள் நல்லாய்த் தான் இருக்குதுகள். நல்ல விதையும் போடுதுகள், நல்ல மரமாய் வளர்ந்து விழுதுகளும் விடுதுகள், ஆனால் இந்த நாட்டிலேயுள்ள சடார் புடார் என்ற விவாகரத்துக்கள், பெற்றோர் இருந்தும் அனாதை போல வாழுகின்ற பிள்ளைகள், பிள்ளைகள் இருந்தும், அனாதைகள் போல் வாழுகின்ற பெற்றோர்களைப் பார்க்கேக்கை; எனக்கு இந்த நாட்டு வாழ்க்கையை ஜீரணிக்கேலாமக் கிடக்கு. அதாலை ரஞ்சனி என்னாலே ஜீரணிக்க முடியாமல் இருக்கிற ஓர் நாட்டு வாழ்க்கைக்கு, உன்னைப் போ என்று வாழ்த்தி அனுப்ப மாட்டேன். ஆனால் நீயாகப் போனால் "நீ நல்லாய் இருக்கனும்" என்டு வாழ்த்துவன். அது வேறு விடயம். ஆனால் ரஞ்சனி ஒரு விவாதத்திற்கு கேட்கிறேன், எங்கடை கலாச்சாரம் பண்பாடு என்டெல்லாம் இருக்குதே அதுகள் எல்லாம் உப்பிடியான கல்யாணங்களாலே இத்துப் போய்..... ஒரு நிலையில்லை இரண்டும் கெட்டனாய் நின்று.... கடைசியா இல்லாமலே போய் விடும் தெரியுமோ."

ரஞ்சனி சிறித நேரம் மௌனமாக யோசித்தாள். சாம்பு மாமா கொஞ்சம் நிமிர்ந்தார். பரிமளமும் சிவநாயகமும் இவள் என்ன சொல்லப் போகின்றாள் எனப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

www.tamilarangam.net

"மாமா...... சொல்லுறதுக்கு கொஞ்சம் வெட்கக்கேடான விஜயம் தான். எங்கடை கலாச்சாரம் பண்பாடு என்டு சொல்லுறையளே, அதுகள் இதுதானென்டு எனக்கு அப்பா சரி, அம்மா சரி எதுவுமே சொல்லித்தரவில்லை எனக்குச் சொல்லித் தந்தது எல்லாம் அவை சரியில்லை, இவை சரியில்லை, அவையோடை பழகாதை இவையோடை படிக்காதை கொன்றாக பயிலையும் காட்டித்தினம், எனக்கும் பிடிக்காட்டுதே பழகினன், இப்ப மனதைப் பறிகொடுத்த பிறகு இப்ப ஐயோ குய்யோ எண்டு குழறினால்....... நான் என்ன பச்சோந்தியே" உரத்துக் கதைத்ததினால் ரஞ்சனியின் குரல் கட்டியது; சிறித இடைவெளி விட்டுத் தொடர்ந்தாள்.

எனக்கு தாத்தா, பாட்டி ஊரிலே சொல்லிக் கொடுத்த நல்ல பழக்க வழக்கங்களைத் தான் என்ரை கலாச்சாரம், பண்பாடு என்று வச்சிருக்கிறன். இந்த நாட்டுக்கு வந்த பிறகு இப்ப தன்ரை அம்மா மாதிரி, அப்பா மாதிரி சரி...... ஒரு நாள் ஒரு விடயம் சொல்லித் தந்திருப்பினமோ. வீட்டிற்கு சாமான் மாத்திரத்திறும், கிழமைக்குக் கிழமை பார்ட்டி வைக்கிறதும், ரெலிபோனில் அலட்டுவதும், படம் பார்க்கிறதும் தன்னை ஸ்ரைலில் பண்ணித் திரிகிறதையும் தவிர, ஒரு நாள்..... எங்களை அணைச்சு வைச்சிருப்பினமோ. எங்களை அந்தக் குடும்பத்துப் பிள்ளைகளோடு தள்ளியிட்டு, தாங்கள் தங்கடை சந்தோசத்தைப் பார்த்தினம்."

இடைநிறுத்தினாள் ரஞ்சனி. மூச்சு வாங்கியது. கண்களில் சிவ தாண்டவ சிகப்பு படர்ந்திருந்தது.

www.tamilarangam.net

நெற்றி வியர்த்திருந்தது.



சாம்பு மாமா ரஞ்சனிக்காக பெரிதும் பரிதாபப் பட்டார்.

அவளின் அறையை சுற்றும் முற்றும் பார்த்தார். அழகாக ஒழுங்குபடுத்தி வைத்திருந்தாள். மேசையின் ஓர் கதிரையில் தாய், தகப்பன், தம்பியுடன் சேர்ந்தெடுத்த படத்தை பிறேம் போட்டு வைத்திருந்தாள். தவிர தம்பியாரும் தானும் சேர்ந்தெடுத்த இரண்டு மூன்று படங்கள் அறையினுள் வெவ்வேறு சுவர்களில் தொங்கிக் கொண்டிருந்தது. ஓர் சரஸ்வதிப் படத்துக்குப் பக்கத்தில் தானும் வீணையுடன் இருப்பது போல சின்ன வயதில் எடுத்த படத்தை மாட்டியிருந்தாள். எங்குமே லாலின் படத்தைக் காணவில்லை.

அந்தச் சின்ன உள்ளத்தின் ஆசைகள்...... அபிலாசைகள் அவளின் சின்ன உலகம் எல்லாவற்றையும் சாம்புமாமாவினால் நன்கு உணரக் கூடியதாக இருந்தது.

ரஞ்சனி இப்போ முற்றாக மேசையில் ஓர் பக்க கன்னம் அழுத்தியபடி படுத்திருந்தாள். தனது கைகளை அவளின் தலையில் இருந்து விலக்கிக் கொண்டு கீழே இறங்கி வந்தார்.

"ஏதும் புத்திமதி சொன்னீர்களா மாமா" பரிமளம் பதட்டப்பட்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

"இல்லை பிள்ளை...... அவள் புத்தியுள்ள பிள்ளை.... அவளுக்கு ஏதுவும் சொல்லத் தேவையில்லை. அதுக்கு காலமும் கடந்து போச்சு"

பரிமளம் நிமிர்ந்து பார்த்தாள்.

"நான் சொல்லுறன் என்டு குறை நினைக்காதையுங்கோ ரஞ்சனியின்ரை இன்றைய நிலைக்கும் காரணம் நீங்க தான். அதை நான் விளக்கமாக சொல்லத் தேவையில்லை. நீங்கள் காட்டின பாதையிலே போன பிள்ளையை, இருத்தி வைச்சு நாங்கள் காட்டின பாதை பிழை. என்று இன்று மட்டும் நீங்கள் ஒத்துக் கொள்ளாத போது எப்படி அந்தப்பிள்ளை தன்ரை காதலை; ஒரு தோல்வியை நினைக்கும்.

நீங்கள் இடையிலே ஒரு காலத்திலே ஆவது சொல்லியிருக்காமலே "பிள்ளை..... இது சும்மா நான் படிக்கிறம். இப்படித் தான் நாங்கள் போற போற இடங்களில் நடித்து என்டு பாம்புக்கா அட்ஜஸ் செய்யுற நாங்கள் என்று எங்கடை பச்சோந்தி தன்மையை அதுக்கும் சொல்லியிருந்தால் சிலவேளை அது உண்மையை அறிந்திருக்கும்.

"ஆனால் எங்கடை சனத்தை முன்னுக்கு பின் தெரியாமல் எப்படி படிக்கிறது என்டு கதைக்கிற டெனிஸ்காரர்களை தெய்வமாய் தூக்கி வைச்சு, அதுகளைக் காட்டினால் பச்சைமண்ணுகள் என்ன செய்யும்......? தெய்வத்தை பூஜிக்கிறதுகள்.... பிரசாதம் கிடைக்கேக்கை அது நஞ்சு என்றால், அதுகள் எதை நம்புறது" சாம்பு மாமா இடை நிறுத்தினார்.

www.tamilarangam.net

"ஏன் மாமா கதைக்க, அப்பா அம்மா உண்மையாய் எங்களை வளர்த்திருந்தால் உங்களை எதற்கு கூப்பிட- வேணும், எல்லாத்துக்கும் மேலாலை மாமா அம்மா இவ்வளவு துள்ளுறாவே..... ஊரிலே பாட்டி தாத்-தாவுக்கு முன்னாலே தலை வெட்டித் திரிவாவோ, இல்லை தினம் தினம் டியூட்டியும், டெனிஸ்க்காரரோடை சேரே-
-த்தை கொஞ்சமாய்ச் சரி குறைப்பாவோ.... உவாவே இந்த நாட்டிலே இப்படி மாறின பிறகு நான் இந்த நாட்டிலே ஒருத்தனை விரும்பினது என்ன தப்பு.....

யாரும் எதிர்பார்க்காத வகையில் பத்திரகாளியாக பரிமளம் வந்து "அம்மா என்ட மரியாதை இல்லாமல் கதைக்கிறயோ" எனக் கன்னத்தில் மாறி மாறி அடித்தாள்.

"பிள்ளை பிள்ளை அவளை அடியாதை" சாம்புமா-மா ஓடிப் போய் பரிமளத்தை தடுத்தார். ரஞ்சனியைக் கட்டிப் பிடித்து விலத்தினார், சிவநாயகம்.

"உவளைக் கொல்ல வேணும்"

"அடிச்சுக் கொல்லட்டும் விடுங்கோ மாமா" தகப்பனின் கையுள் இருந்தபடி கேவினாள் ரஞ்சனி.

அந்தக் கேவலில் ஏமாற்றம் இருந்தது. தோல்வி இருந்தது. அடக்கு முறைக்கு எதிராக எல்லாரையும் இடி-க்கப் போகின்றேன் என்ற வேதனை இருந்தது.

"வாபிள்ளை! உன்ரை அறைக்குப் போவோம்." என்றபடியே அணைத்துக் கொண்டு ரஞ்சனியுடன் அறை-

www.tamilarangam.net

(தொடர்ச்சி 47)

| | | |
|---|---|---|
| டெனிஷ் குடியுரிமையாளர் | 5.022.269 | 4.987.762 |
| மொத்த சனத்தொகை | 5.122.065 | 5.129.778 |
| மொத்த சனத் தொகையிலும் வெளிநாட்டுக் குடியுரிமையாளர் | 1.9% | 2.8% |

க்குப் போனார் சாம்பு மாமா.

உவன் கதைச்ச கதையளைப் பார்த்தையளோ... மேடா செய்தாலும் என்ரை ஆத்திரம் தீராது. எல்லோரையும் சந்தி சிரிக்க வைத்து, வெள்ளைக்கார மாப்பிளை தேவைப்படுதோ உவாவுக்கு" பரிமளம் ஹோலில் இருந்து அரற்றினாள்.

"சும்மா இருமப்பா..... சாம்புமாமா என்ன நினைப்பார்" சமாதானப்படுத்தினார் சிவநாயகம்.

"நீங்களும் தான் எல்லாத்துக்கும் காரணம், பிள்ளை பிள்ளை என்று செல்லம் கொடுத்து....." ஆத்திரம் சிவநாயகத்தில் மாறியது. சிவநாயகம் மௌனமானார்.

☆

ரஞ்சனி மேசையின் மீது கைகளில் தலையை கவிழ்த்துவிட்டபடி, மௌனமாக இருந்தாள். இடைக்கிடை திடுக்கிட்ட மாதிரி விக்கி விக்கி அழுதாள். பின் யோசித்துக் கொண்டு இருந்தாள். சாம்புமாமா பக்கத்தில் இருந்து ஆறுதலாக அவள் தலையை தடவிக் கொண்டு நின்றார். அவருக்கு ஆறுதலாக இருந்திருக்க வேண்டும். அப்படியே அமர்ந்திருந்தாள். கன்னங்களில் கண்ணீர் காய்ந்திருந்தது.

www.tamilarangam.net

"என்ன மாமா...... நீங்கள் கதைக்கிறதைப் பார்த்தால் நீங்கள் கட்டி வைச்சுப் போடுவியள் போல கிடக்கு." பரிம-ளத்தின் குரலில் ஓர் கறுவல் தெரிந்தது. சாம்பு மாமாவுக்கும் தன் எல்லையும் எதுவரை என்று நன்கு தெரியும்.

"இல்லைப் பிள்ளை...... ரஞ்சனிக்கு முதலே நான் சொ-ன்னது போலை எந்த முடிவும் எடுக்கவோ அல்லது எடுக்க வேண்டாம் என நான் சொல்லமாட்டேன். ஆனால் அவளை மறக்கச் சொல்லி சொல்லுங்கோ என என்னை கூப்பிட்டி-யளோ...... ரஞ்சனி உங்கள் எல்லோரிலும் உயிரை வைச்-சிருந்தும், அதே கதறியழுதது. சொன்னாப் போலை உங்க-டை பாசத்தின்ரை வரட்சியை இன்னொரு உறவினாலே ஈடுகட்டிக் கொண்டிருக்கிறதாக எனக்கு தோன்றிய பிறகு, அந்த உறவை மற என கடைசிவரை சொல்லமாட்டேன். அது துரோகம் மட்டுமில்லை, பிள்ளை, அது இன்னும் ரஞ்ச-னியை தனிமைப்படுத்திப் போடும்.

"அப்ப இப்ப என்ன செய்யுறது மாமா" சிவநாயகம் கேட்ட போது அவர்கள் கண்கள் அட்சய பாத்திரம் ஏந்-தியது.

நீங்கள் இரண்டு பேரும் திரும்ப தனிய இருந்து யோசியுங்கோ, அவள் எதிர்பார்க்கிற அப்பா அம்மாவாக நீங்கள் மாறுங்கோ, பிறகு அந்தக் குழந்தையைச் சேர்-த்து முடிவு செய்யுங்கோ".

சாம்பு மாமா தனது தோள்ப்பையை தூக்கிக் கொண்டு கிளம்பினார்.

www.tamilarangam.net

"என்ன மாமா! சாப்பிடாமல் கிளம்பிறியள்" சிவ-
-நாயகமும் பரிமளமும் வழிமறித்தார்கள்.


"என்னைப் பற்றி கவலைப்படாதையுங்கோ பிள்ளை. என்னை எப்பவும் நீங்கள் உபசரிக்கலாம். ஆனால் மாடியிலே பசியோடை இருக்கின்ற ரஞ்சனியை கவனியுங்கோ. நான் வாறன்" சாம்பு மாமா வீதியில் இறங்கி நடந்தார்.

~~முற்றும்~~

(சு.த.ப. தொடர்ச்சி)

விட்டு எழுந்து வீடு நோக்கி நடந்தான்.

— முற்றும் —



www.tamilarangam.net




ச. நாதன். ஜேர்மனி.

ராஜா மாதவன் பிறந்த தாய் நாட்டினை விட்டு பாதையிலே வெகு தூரம் வந்து பனி படரும் ஒரு நாட்டில் அகதி என்னும் முத்திரை குத்தி ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் முது மொழிக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் ஒரே முகாமில் சந்திப்பின் நிகழ்வுகளில் சங்கமித்த இரு நண்பர்கள்.

ராஜா, மாதவனிடம் சமுகத்தில் முக்காடிட்டு மூழ்கி வரும் சாதி மத பேதங்களில் தனது நிலை என்ன என்பதை சற்றும் ஒளிவு மறைவின்றி எடுத்துக் கூறினான். இடையே மாதவன், ராஜா நீ கூறிய படி நான் உயர் சாதியில் உள்ளவன், எமது பெரியவர்கள் விட்ட தவற்றை நாமும் பின்பற்றுவது கூடாது. இவைகள் நாம் விட்ட பாரிய தவறுகள். இப்போது நான் உணர்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்கிறேன். நான் இதில் இருந்து அப்பட்டவன் என்று கூற இருவரும் நல்ல நண்பர்கள் ஆயினர். இவர்களின் நட்புடமை காலமாக ஆண்டுகள் மூன்று உருண்டோடின. மாதவன், ராஜா இருவரும் டென்ஸ் படித்து முடித்து தொழில் — நுட்பக் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்தனர்.

வழமை போல் ராஜா பாடசாலைக்குச் — சென்றான். பஸ் தரிப்பு நிலையத்தில் மாதவனைக் காணவில்லை. பாடசாலைக்கும் அன்று அவன் சமுக மளிக்க வில்லை. என்ன நடந்திருக்கும் என்று சிந் தித்த ராஜா, பாடசாலையின் இடைவெளியினை முடித்துக் கொண்டு மாதவன் வீடு நோக்கி விரைந் தான். வீட்டை அடைந்த ராஜா அழைப்பு மணி ஆழியினை அமர்த்த ஏகிய கை சற்று நின்றது.

மாதவன் இவ்வாறு இரகசியமாக ஒன்றும் கதைத்த தில்லை. ராஜா கூர்மையாக செவிகளை கூர்ந்து வைத்தான். மறைந்திருந்து ஒட்டுக் கேட் பது தவறு. இருந்தும் தனது நெருங்கியவனின் — உண்மையான உள்ளத்தினை அறியும் சந்தர்ப்பமிது.

மாதவன் நண்பனிடத்தில் கூறுகிறான். "அண்ணை, நாங்கள் இங்க வந்து இருக்கிறம். ஆனை யானை ஏதோ எல்லோரையும் போல நாங்களும் — சனநாயகம் பேசி சமாளித்துப் போட்டு...."

இடை மறித்து மற்றவர்! "அதுக்கடாப்பா — நாங்கள் ஊரிலை சிறையிலை கஞ்சி தண்ணி கொடுத்துவாங்கினனாங்கள் எல்லாம் எப்படி யெண்டப்பா ...? மணி

www.tamilarangam.net

சரியா சந்தேகப் படுகுது."

"அண்ணை இங்கை இப்பிடி கதைக்கக் கூடாது. ஏன் தெரியுமே, யார் இன்னார் என்று தெரியாது... முன்சீப் போடுவாங்கள். ஏதோ நாய்கள் கூப்பிட்ட வா அண்ணை வா என்று பழக வேண்டியது கட்டாயம். இங்கை இருக்கிற வரைக்கும் அப்பிடி இப்பிடி போவம்." – மாதவன்.

மாதவன் எழுந்த போது, ராஜாவைக் கண்டான். மாதவன் ராஜாவை கட்டிலிருந்து உள்ளே அழைத்துச் சென்று எதைக் கதைக்கும் வந்திருந்த ராஜா, வீட்டிலை கலியாணம் பேசினம். நீ என்ன நினைக்கிறாய்...? ஒரு கணம் திடுக்கிட்டு என்ன என்றான். அது வரையில் ராஜாவின் மனது மாதவனின் இரட்டைச் செயலை எண்ணிய படியே இருந்தது. மாதவன் மீண்டும் கல்யாண விசயத்தை கூற, "அப்ப என்ன... ஒரு கார் – வீடு – காசு – காணி – நகை அப்படித்தானே?" என ராஜா கூறி முடிக்கு முன்

"சீசீ, நான் இவைகளில் இருந்து விடுபட்டவன் உனக்குத் தெரியும் தானே என்னைப் பற்றி" என்றான் மாதவன். ராஜா எழுந்து, மாதவனிடம் விடை பெற்று வெளியே வந்தான்.

ராஜா மௌனமாகி விட்டான். "...என் இனிய நண்பா! மீட்டுப் பார் நம் இறந்த காலத்து இனிமையான நினைவுகளை. உன் உண்மையான பக்கம் அறியாது, நானும் உன் நட்பிலே உள்ள

www.tamilarangam.net

-ம் மகிழ்ந்து கொண்டேன். இன்று தான் உன் உள்ளத்தினை வெளிப்படுத்தினாய் இது தானா உன் உயர்குணம்..." மனதுக்குள் நினைத்தபடி நூல் நிலையத்தினை அடைந்தான். ராஜா தமிழிலே வாசிக்கும் கூடும் அமைந்த நூல் நிலைய அதிகாரியும்-ராஜாவும் நண்பர்கள்.

உள்ளே சென்ற ராஜா அங்கே வந்திருந்த வீரகேசரி அனைத்தையும் விளம்பரப் பாகம் கூட விடாது பார்த்தான். வழமை போல இரண்டு சிங்கள விரோதக்காரர்க்கு பயங்கரவாதிகளின் மரணதண்டனை-இவர்கள் மோதலில் இருவர் பலி- இராணுவம் செல் தாக்குதல்... இப்படியே விளம்பரப் பக்கத்தினை புரட்டிய ராஜாவின் பார்வை ஒரு கணம் சற்றும் அசைவின்றி அப்படியே நின்றது. மறுகணம் பத்திரிகையினை கிழித்த சத்தம் கேட்டு அதிகாரி ராஜாவைப் பார்த்து ராஜா என்ன நடந்தது என்றான். ராஜா ஒன்றுமில்லை மன்னிக்கவும் என்றான்.

'மணமகன் தேவை'
டென்மார்க்கில் வாழும் உயர் வேளாள குல இந்து மத மணமகன் மாதவன் - வயது 26. இவருக்கு அதே இனத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. சீதனம் சிறப்பாக எதிர் பார்க்கப் படும்.
தொடர்புகட்கு,
வீரகேசரி.
தபால் பெட்டி எண் 20881.
கொழும்பு.

ராஜா பத்திரிகைகளை அடுக்கி வைத்து -

# டென்மார்க்கில் டெனிஸ்க்காரர்கள் மட்டுமா....?



மொழிபெயர்ப்பு:- கமலா

டென்மார்க்கில் ஏறக்குறைய 142.000 வெளிநாட்டுக் குடியுரிமையாளர்கள் வசிக்கின்றனர். இங்கு குறிப்பிடப்படுவது டெனிஸ் கடவுச் சீட்டு இல்லாத மக்களேயாகும். இதில் மிகப் பெரிய குழுவினராக துருக்கியரும், இரண்டாவதாக பிரித்தானியரும், மூன்றாவது நோர்வே நாட்டவருமாகும்.

டெனிஸ் மக்கள் தொகையில் 2.8% வெளிநாட்டுக் குடியுரிமையாளராகும். மேற்கு ஜேர்மனி (7%) சுவிற்சலாந்து (14%) பெல்ஜியம் (9%) போன்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது இது அதிகமானதாக இல்லை. இருந்தும் இது ஒரு பிரச்சினையென டெனிஸ் மக்கள் கருதுகின்றனர். வெளிநாட்டவர்கள் தமது வேலைவாய்ப்புக்களையும், வீட்டு வசதிகளையும் பெற்றுக் கொள்வதாக ஒரு சிலரும், டெனிஸ் கலாச்சாரம் பாதிக்கப்படுவதாக ஒரு சிலரும் பயப்படுகின்றனர். வேறுசிலர் இனத்துவேசமுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். பாராளுமன்ற அரசியல் கட்சிகளில் முக்கியமாக பெம்ஸ்கிறிட்ஸ் (Fremskridts) கட்சியினர் டென்மார்க்கில் வெளிநாட்டவர் இருப்பது ஒரு பிரச்சினைக்குரிய விடயம் எனக்கருதுகின்றனர்.

ஒரு டெனிஸ் பெண்ணையோ, ஆணையோ திருமணம் செய்தாலன்றி ஒரு வெளிநாட்டவர் டென்மார்க்கில் இருப்பதற்கு நிரந்தர அனுமதி பெறுதல் கடினமாக இருக்கும். நோர்வே, சுவீடன், பின்லாந்து, ஐஸ்லாந்து போன்ற வெளிநாட்டவரும் இங்கு வந்து குடியேறுகின்றனர். இவர்கள் வேலை பெறாவிடினும்

டென்மார்க்கில் வசிப்பதற்கேற்ற அனுமதியைப் பெறுவர். ஐரோப்பிய நாட்டுக் குடியுரிமையாளர்கள் மூன்று மாதத்திற்குள் வேலை தேடிக் கொண்டால் மட்டும் டென்மார்க்கில் வசிப்பதற்கு

www.tamilarangam.net

அனுமதியைப் பெறுமியும்.

டென்மார்க்கிலுள்ள வெளிநாட்டுக் குடியுரிமையாளர்கள்.

| | 1980 | 1989 |
|---|---|---|
| வடநாட்டினர் | 22.608 | |
| (இதில்) நோர்வே | 10.030 | |
| சுவீடன் | 7.726 | |
| ஐரோப்பியர் | 24.212 | |
| (இதில்) பெரிய பிரித்தானியர். | 9.361 | |
| மேற்கு ஜேர்மனி | 8.700 | |
| மற்றைய ஐரோப்பியர். | 26.852 | 41.993 |
| யூக்கோசிலேவியா. | 7.126 | 9.149 |
| போலந்து. | 970 | 3.861 |
| துருக்கியர். | 14.086 | 26.072 |
| ஆபிரிக்கா. | 4.112 | 5.502 |
| வட அமெரிக்கா | 5.096 | 5.090 |
| (இதில்) யுனைற்றற் ஸ்ரேற் | 4.271 | 4.202 |
| தென் மத்திய அமெரிக்கா | 1.644 | 2.105 |
| ஆசியா | 13.638 | 32.276 |
| (இதில்) ஈராக் | 102 | 1.733 |
| ~~ஈரான்~~ | 215 | 7.715 |
| லெபனான். | 156 | 2.070 |
| பாக்கிஸ்தான். | 6.400 | 6.454 |
| இலங்கை, | 181 | 4.338 |
| வியட்நாம். | 1.286 | 3.375 |
| பசுபிக்தீவினர். | 548 | 645 |
| ஏனையோர் | 121 | 60 |
| நாடிழந்தோர். | 965 | 4.800 |
| எல்லா வெளிநாட்டுக்குடியுரிமையாளர். | 99.796 | 142.016 |

(தொடர்ச்சி பக்: 39)

www.tamilarangam.net

# ~~சிரிக்கச்~~ சிந்திக்க

சிந்திக்க... சிந்திக்க... சிந்திக்க....

— மூரன் —

ஏறக்குறைய ஐந்து வருடங்களுக்கு முன்னர் மொழிப் பாடசாலையை முடித்துக் கொண்டு வந்து குடியேறிய குடித்தனம் தான் தற்போது குடியிருக்கும் இந்தச் சின்ன அறை. எதுவிதமான நெருக்கடிகளும் இல்லாமல் தனியே அமைந்திருக்கின்ற ஓர் அழகான தனி வீடு. ஆறு டெனிஸ்க்காரர்களோடு சேர்ந்து வாழும் ஒரு தமிழன்.

யன்னலுக்கு வெளியே பார்த்தால் கட்டையான சின்னச் சின்ன அப்பிள் மரங்கள் சில, பேர் ஊர் தெரியாத வண்ண வண்ண நிறங்களிலான குண்டுப் பூமரங்கள், கொஞ்சம் தள்ளினால் போல் மெல்லிய செழித்த மரக்கூடல், அங்கே வாழ்க்கையாக வந்து போகும் குஞ்சுப் பறவைகள் பலவும், உயர்ந்த அந்த நீலவானமும், எனக்கு எப்போதும் ஆனந்தத்தை அளிப்பவை.

இவைகளோடு நாலைந்து வாழைக்கன்றுகள், ஒரு சில தென்னைமரங்கள், நிற்பதோடு ஓடி விளையாடும் எனது கிராமத்து அணிற் குஞ்சுகளும் தாயோடு விளையாடும் ஆட்டுக் குட்டிகளும் அங்கு இருக்க வேண்டும், என்று என் கற்பனை மனதில் அடிக்கடி எட்டிப் பார்க்கும்.

நினைத்த வேளை குளிக்கக் கூடிய குளியல் அறை

www.tamilarangam.net

-யும் நினைத்த வேளை சமையல் பண்ண நல்ல சமையல் அறையும், அடிக்கடி மாறிவரும் டெனிஸ் நண்பர்களும், அதனால் ஏற்படும் அனுபவங்களும் எனக்கு நன்கு பிடித்திருந்தது.

இவைகளை விட நினைத்த மாதிரி ஒரு பாட்டை போட்டுக் கேட்கவும், விரும்புவதை இருந்து எழுதுவதற்கு கிடைக்கின்ற தனிமையான சுகமும் என் வீட்டில் நிறையவே காணப்பட்டது.

இது எல்லாம் அப்போ.

இந்த நிலையெல்லாம் மாறி, ஏதோ தெரியாது கொஞ்சக் காலமாக எனக்கு இங்கு இருக்கப் பிடிக்கவேயில்லை, வசதியில்லாத அறை போல் என் மனம் அடிக்கடி நினைத்துக் கொள்கிறது.

யாராவது நண்பர்கள் வந்தால் ஒன்றாய், முஸ்ப்பாத்தியாய் படுக்க முடியாத நிலை. நாலு பேர் இருந்து தண்ணியடிக்க முடியாத நிலை, மூச்சுக் கூட விட முடியாத அளவிற்கு அறையினுள் சாமான்கள் நிறைந்து விட்டது. ஒழுங்காக உடுப்புக்களை ஒழுங்கு படுத்தி வைக்கக் கூட இடமில்லை.

இப்படியான இந்தக் காரணங்களால் எப்படியாவது ஒரு நல்ல வீடோ அறையோ மாற வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் வளர்ந்து கொண்டே போனது.

இப்போது வேலையும் இல்லை, படிப்பும் இல்லை,

www.tamilarangam.net

எப்படியும் நாளைக்குப் போய் "வீடுகள் பாதுகாப்பு நிலையத்தி
டம் (Bolig selskab) போய்க் கதைக்க வேண்டும் என்
-றும், எப்படியும் அவர்கள் எனக்குத் தரத்தானே வேணும்
என்றும், எப்படியும் சண்டை பிடித்தாவது எடுத்து விட வேண்
டும் என்று நினைத்துக் கொண்டேன்.

இந்தப் பிரச்சினை எனக்கு மட்டுமல்ல, இன்று இங்கு எல்லோருக்கும் தான். மனைவி வரப் போகின்றவர்களுக்கும் மனைவி வந்தவர்களுக்கும், ஏன் ஒரு டெனிஸ்க்காரனுக்கும் இது பெரிய பிரச்சினையே. எதற்கும் நான் முதலில் முந்திக் கொள்ள வேண்டும் என நினைந்துக் கொண்டு அன்றைய நாளைக் கழித்துக் கொண்டேன்.

மறுநாள் சுமார் 10.30 மணியிருக்கும் போகும் போது தபால் பெட்டியைப் பார்த்து விட்டுப் போவோம் என நினைத்துக் கொண்டு பெட்டியைத் திறந்தேன். பல மலிவு விற்பனை விளம்பரங்களோடு உள்நாட்டுக் கடிதங்கள் சிலவோடு ஒரு வெளிநாட்டுக் கடிதமும் என்பதை இனங்கண்டு கொண்டேன். நீலமும், சிவப்பும் மாறி மாறியான கரை அமைப்பைக் கொண்ட ஓர் கனத்த வான் கடிதம். ஆவலோடு அள்ளிக் கொண்டு அறைக்கு வந்தேன்.

"From நித்தி"

கடிதத்தை உடையாமலே கொஞ்ச நேரம் எனது நாட்டை நினைத்துக் கொண்டேன். ஏறக்குறைய 11 வருடகால எனது பள்ளித் தோழன். சின்ன வயதிலிருந்தே A/L படிக்கும் வரை ஒன்றாய்ப் படித்த, ஒன்றாய்த் திரிந்த நண்பன். நித்தி மட்டுமல்ல, அவனின் சகோதரி

www.tamilarangam.net

ஒருவர்:- இங்கிலிஸ் சொல்லில் ஒரு பெரிய சொல் சொல்பார்ப்பம்
மற்றவர்:- Smiles
ஒருவர்:- என்னடா பெரிய சொல் சொல்லச் சொன்னால்
மற்றவர்:- என்னடா முதல் "S"யும் கடைசி "S"யும் வெட்டி விட்டுப்பார்.
ஒருவர்:- ஒரு "Mile"... நீ எங்கேயோ போட்டாய்--- (ராஜி)

நிலா கூட எனக்குச் சிநேகிதமானவள். இவள் சிநேகிதம் தான் நித்தியையும் என்னையும் நன்கு இணைய வைத்தது. அவளுடைய அம்மா, அப்பா, வயது போன பாட்டி கூட என்னில் நிறையவே அன்பு வைத்திருக்கின்றார்கள்.

ஏதோ மூன்று வருடங்களுக்குப் பின்னர் இன்று எழுதியிருக்கின்றான். நான் எழுதிய எத்தனையோ கடிதங்களுக்கு அவன் பதில் போடவில்லை, ஆனால் இன்று அவனது கடிதம் கிடைத்தது அளவில்லா மகிழ்ச்சியைத் தந்தது.

அன்போடு நண்பா,

நீண்ட கால இடைவெளிக்குப் பின் இன்று உனக்கு வரைகின்றேன். எதை எழுதுவது எதை விடுவது என்று எனக்குத் தெரியவில்லை, எழுதக் கூடிய மனநிலையும் கூட இல்லை, உனக்காக எழுத வேண்டியது என் கடமையும் கூட, எனக்குத் தெரிந்த ஒரு பெரி-யவர் கொழும்புக்குச் செல்ல இருப்பதால் அவரிடம் இக்க-டிதத்தை அனுப்பி விட வேண்டும் என நினைத்து அவச-ரமாக எழுதுகின்றேன்.

படையினர் தாக்குதல்— பதில் தாக்குதல்— மரணங்கள்— சமாதானப் பேச்சுக்கள்— எதிர் எதிரான கருத்துப் பரிமாறல்கள்— ஜனநாயகப் பிரகடனங்கள்— பொருளாதாரத் தடைகள்—

www.tamilarangam.net



இவற்றையெல்லாம் பழக்கப்படுத்திக் கொண்ட மக்கள் திருவிழாவும் கும்பாபிஷேகங்களும், களியாட்டங்களும் விரும்பியே செய்கின்றனர்.

தத்துவ அறிவியல்- தொழில்நுட்பம்- விஞ்ஞானம் என்பன எல்லாம் வளர்ந்துள்ளன என்று கூறப்படுகின்றது. ஆனால் இவற்றால் மனித குலத்துக்கு (எம்நாட்டுக்கு) நன்மைகள் கிடைக்கவில்லை, தீமைகளே பெருகியுள்ளன. வளர்ச்சியில்லை அழிவு நிறையவே உண்டு. இவற்றை வாழ்க்கையின் நியதி என்று கூறிவிட்டு "சும்மா" இருப்பதே சுகம்.

துன்பம் வரும் போது சிரியுங்கள் என்றான் வள்ளுவன் Laughter is the best medicine (சிரிப்பு மிகச்சிறந்த மருந்து) என்பர் ஆங்கிலேயர், இது எங்களுக்கு, எனக்கு எவ்வளவு காலத்துக்கு ஒத்துவரும்.

இப்போது மாரிகாலம், இக்காலத்தில் நமது கிராமத்து மக்கள் படும் கஷ்டங்கள் உனக்குத் தெரியாதன்று. கூலித் தொழிலாளர்களும் விவசாயிகளும், மீனவர்களும் பஞ்சம் பட்டினியோடு மல்லாடும் பரிதாபத்தை எழுதத்தேவையில்லை, என்னால் எழுதவும் முடியாது.

நண்பா! ஜனவரி 20க்கும் 23க்குமிடையில் எங்கள் கிராமமும் அயல் கிராமங்களும் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டது. கிராமங்கள் அனைத்தும் கதிகலங்கின. மண்ணிலும் விண்ணிலும் நடாத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதல் மிகவும் பயங்கரமானது, கோரமானது

www.tamilarangam.net

மாலை கூட.

இறக்குறைய 300 பீப்பாய்க்குண்டுகள் போடப்பட்டன.

"பீப்பாய்க் குண்டுகள்"
"பீப்பாய்க் குண்டுகள்"
"பீப்பாய்க் குண்டுகள்"

என என் மனம் எதிரொலித்துக் கொண்டது. வாசிப்பதை மனம் மறுதலித்தது. என்டா "பீப்பாய்க்குண்டுகள்" என்று என் மனம் என்னையே பல தடவைகள் கேட்டுக் கொண்டது. எனது சிந்தனைக்கும் கற்பனைக்கும் எட்டியளவு யோசித்துப் பார்த்து அதற்கென சில வடிவ அமைப்புக்களும் கொடுத்துப் பார்த்தேன். இங்கே நடக்கும் "பஸ்ரலாவன்" விழாவில் பாவிக்கப்படும் மரப்பலகையிலான பீப்பாய்க் குண்டுகள் தான் என் நினைவில் முன் வந்து நின்றது.

அதே அளவிலான பெரிய பெரிய "பீப்பாய்க்குண்டுகள்" மேலிருந்து என் மண் மீதும் என் கிராமம் மீதும் விழுந்து வெடித்துப் புகைப்பது என் கண் முன் தெளிவாய்த் தெரிந்தது. டென்மார்க்கில் பார்த்த "வியட்நாம் அமெரிக்க யுத்தப் படங்கள் பல என் மனத்திரையில் வந்து ஓடி மறைந்தது.

இறக்குறைய 7,8 வருடங்களுக்கு முன்னர் வேலி பாய்ந்து மதில் பாய்ந்து வயல்வெளிகள் தாண்டி பற்றைய-க்குள்ப் போய் பதுங்கிக் கொண்ட போது ஆமி வந்து சுற்றி வளைத்து நான் மட்டும் பிடிபட்டுக் கொண்டதும், கத்-தரித் தோட்டத்தில் ஒளித்துக் கொண்ட தம்பி மட்டும் தப்பிக் கொண்ட நினைவுகளும் என்னுள் எட்டிப் பார்த்தது.

www.tamilarangam.net

இப்போது சிறு விடயங்களைச் செய். நாளடைவில் பெரிய விடயங்கள் உன்னை நாடி வந்து தம்மை நிறைவேற்றி வைக்கும் படி கேட்கும்.

பேசினார்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என்னைப் பார்த்து சிரித்துச் சிரித்து கேலி செய்தார்கள். உண்மையா பிரமையா என என் கண்களை கசக்கி கசக்கிப் பார்த்தேன் ஒருவரையும் காணவில்லை..

தொடர்ந்து கடிதத்தைப் படித்தேன்.


புதிய வருடம் பிறந்தும் எம் வாழ்க்கைக்கு வழியே தெரியவில்லை. எல்லாம் கனவாய்ப் போய்விட்டது. எனக்கு எல்லாமே சங்கடமாயிருக்கு..

மீண்டும் யுத்த நிறுத்தம்- யுத்த நிறுத்த மீறல்கள்- செல்லடிகள்- குண்டுவீச்சுக்கள்- பங்கர் வாழ்க்கை- பட்டினி- சாவு- தொற்று நோய்கள்... இடிப்புக்கள்....

அரசாங்கத்தினரோ இயக்கத்தினரோ இங்கு மக்களின் நலன் கருதி ஏதாவது நடவடிக்கை எடுக்கின்றார்கள் என்றால் அதுவும் இல்லை. இதுகளையெல்லாம் எழுதி சந்தோசமாயிருக்கும் உன்னையும் ஏன் குழப்புவான் நீ எவ்வளவோ கொடுத்து வைத்தனியடா... நாங்கள் எல்லாம் பழி செய்தனாங்களடா... டேய்... எங்கட பள்ளிக்கூடத்தைக் கூட அடிச்சுப் போட்டாங்கள்... (தொடர்ச்சி 59 ம்.)

www.tamilarangam.net


# குறுக்கெழுத்துப் போட்டி :13




உங்கள் பாவனைக்கு:

அலுவலகப் பாவனைக்கு:

www.tamilarangam.net



www.tamilarangam.net

(56-ப. தொடர்ச்சி)

நாங்கள் இருவரும் படித்த அந்தப் பாடசாலையும் அந்த நூற்றுக் கணக்கான அந்த மாணவ மாணவிகளும் ஒவ்வொருவராய் "குளோசப்பில்" வந்து கொண்டு "ஐயோ எங்களைக் காப்பாற்றுங்கள்.... எங்களைப் படிக்க விடுங்கள்.. எங்களுக்கு ஒரு நல்ல வழியைக் காட்டுங்கள்" என்று ஒவ்வொருவராய் வந்து அழுது கொண்டு போனார்கள்.

எனக்குத் தலையெல்லாம் விறைத்தது. உடல் வெடவெடுத்தது. கண்கள் பனித்தது. கால்கள் நடுங்கின. நீங்கள் தான் பழி செய்தவர்களா...? அல்லது இங்கு வெளிநாடுகளில் வாழும் நாங்களா பழிசெய்தவர்கள்...? இந்தக் கேள்விகளை என்னுள் மேலும் மேலும் கேட்டுக் கொண்டேன். நாங்களா? இங்கு சந்தோசமாய் வாழ்கின்றோம். பொதுவாக தமிழனாய்ப் பிறந்த அனைவருமே பழிசெய்தவர்கள் தான். என நினைத்துக் கொண்டு மீண்டும் கடிதத்தைப் படித்தேன்.

அரிசி 1kg 55ரூபா, மா 40ரூபா - சீனி 60ரூபா மண்ணெண்ணெய் 100 ரூபா இப்படியாக அத்தியாவசியப் பொருட்கள் விலையேற்றம் இந்த நிலையில் எனது குடும்பத்தையும் வயது போன அம்மம்மாவையும் எப்படி நான் காப்பாற்ற முடியும். கொழும்புக்கே போக 10,000 ஆயிரம் இல்லாத நிலையில் வெளிநாட்டுக்குப் போக எப்படி நினைக்க முடியும்.

இந்த நிலையில் பசியாக பட்டினியாக இருந்தாலும் நிம்மதியாய் போயிருக்க ஏற்கனவே இருந்த "பங்கரும்" மழையினால் தூர்ந்து விட்டது. எனக்கு என்ன செய்வதென்றும், எங்கே போவதென்றும் தெரியவில்லை. புதிதாக ஒரு பங்கர் வெட்டி சீமெந்து கட்டலாம் என பெரிதும் யோசிக்கின்றேன். முடியுமானால் எனக்கு கொஞ்சப் பணம் -


(6 ப. தொடர்ச்சி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





"CHANCHIVE"
Postbox: 1205
7500 Holstebro
Danmark

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்